விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1366)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 26 திங்கட்கிழமை (08.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 051

## பொத்துவில் முதல் பொலிகண்டிவரை

# அலையென திரண்ட மக்கள்; ஆர்ப்பரிக்க வைத்த பேரணி!

### பொலிகண்டி மண்ணில் நேற்று வெற்றியுடன் நிறைவடைந்தது



(யாழ்ப்பாணம்)
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான அகிம்சை வழி பேரணி தடைகளையும் தகர்த்து பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்கேற்புடன் பொலிகண்டியில் நேற்று மாலை நிறைவடைந்தது.

19ஆம் பக்கம் பார்க்க

## தமிழரின் கோரிக்கைகள் நிறைவேறும்வரை தொடர்ச்சியாகப் போராடுவோம்

### மக்கள் எழுச்சிப் பேரணியில் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)
பொத்துவில் தொடக்கம் பொலி கண்டி வரையான வடக்கு - கிழக்கு தாயகம் முழுவதுமாக ஐந்து தினங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட மக்கள் எழுச் சிப் பேரணியின் நிறைவில் பிரகடனம் வாசிக்கப்பட்டது.
பிரகடனத்தில் தெரி விக்கப்பட்டுள்ளதா 19



## திலீபனின் நினைவுத் தூபியில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
பொத்துவில் முதல் பொலி கண்டி வரையான அகிம்சை வழிப் பேரணியில் பங்கேற்ற ஆயிரக்கணக்கானோர் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் 19



## கொரோனாவால் 5 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 05 19

## முள்ளிவாய்க்காலில் சேகரிக்கப்பட்ட மண் யாழ்.பல்கலைக்கழகத்தில் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)
பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மாபெரும் போராட்டத்தின் ஐந்தாவது நாளான நேற்று பிற்பகல் பேரணி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்றலை அடைந்தது.
இதன்போது, முள்ளிவாய்க்காலில் இன அழிப்பு இடம்பெற்ற இடத்தில் சேகரிக்கப்பட்ட மண், யாழ். பல்கலைக்கழக ஒன்றியத்தினரிடம் வழங்கப்பட்டுள்ளது. 19



## வடக்கில் நேற்றும் 14 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
"யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 403 பேரின் மாதிரிகள் 19

## மாற்றுத்திறனாளிகளும் பேரணியில் பங்கேற்பு



(யாழ்ப்பாணம்)
பொத்துவில் முதல் பொலிகண்டிவரை யான அகிம்சை பேரணியில் மாற்றுத்திற னாளிகளும் கலந்து கொண்டு ஆதரவு வழங்கினர்.
நேற்று கிளிநொச்சியி லிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 19

## ரயிலுடன் மோதுண்டு ஆசிரியர் உயிரிழப்பு

### அரியாலையில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அரியாலையில் தொடருந்துடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 19

## பேரணியைத் தடுக்க மந்திகையில் வீதி மறியல்

(யாழ்ப்பாணம்)
பொத்துவில் முதல் பொலி கண்டி வரையான அகிம்சை வழிப் பேரணியைத் தடுக்க மந்திகை மடத்தடியில் வீதி மறியல் 19

## மரண அறிவித்தல்



### புஸ்பம் தம்பிராஜா

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ், Colombes ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட புஸ்பம் தம்பிராஜா கடந்த 29.01.2021 (வெள்ளிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தோமஸ் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா, பேரம்பலம், அருளம்மா, சிவயோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான இரத்தினம், சுப்பிரமணியம் மற்றும் சரஸ்வதி, பூமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுரேஸ், ரமேஸ், சுதா, விஜி, ரதிஸ், விஜய் ஆகியோரின் அன்புத் தாயாரும் லங்கதாஸ், சிவா, ரேணுகா, ஜெயம், டெசி, ஜெமில் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிவேதா, நிவேதன், நிதுஷன், அனுசியா, விதுசான், சகானா, திவாகர், அபிராமி, டோர்லின், நிலக்சனா, அக்ஷானா, ஷாம்பவி, ஷாருயா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.02.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 95 rue marcel sembat, 93430 villetaneuse, France எனும் இடத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-1378)

தகவல்:-
வசந்தகுமார் குடும்பத்தினர்

# பளையில் விபத்து; இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பரந்தன் - பளை (ஏ9) பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதன்போது காயமடைந்தவர்கள் பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஞா)

மணமகன் தேவை
யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு
070 640 5951
e-mail : engchelvam@gmail.com
(5453)

## கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை பரிசீலனை செய்தல்

கிளிநொச்சி
**அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்**
A9 வீதி, கிளிநொச்சி

2020.01.01 முதல் 2020.12.31 வரை கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கை ஆலய காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதில் சேர்க்கப்படவேண்டியவை / நீக்கப்பட வேண்டிய விடயங்களை எழுத்துமூலம் 2021.02.28 ஆம் திகதிக்கு (ஞாயிற்றுக்கிழமை) முன் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு உபயகாரர்கள், அடியவர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

(C-1379)

ஆலய பரிபாலன சபையினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
08 - 09 - 1932



மறைவு
07 - 02 - 2021

### முருகேசு செல்வமாணிக்கம்

அல்வாய் வடக்கு வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்வமாணிக்கம் நேற்று (07.02.2021) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - தெய்வானை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் தம்பு - பாறுபதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும் செல்வ னேஸ்வரி, செல்வலிங்கம், குலதெய்வம், மகாதேவன், குமரகுரு, எதிர்வீரசிங்கம், அமுதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ரவேந்திரநாதன், சிவராணி, ரவிமாலா, வதனி, சாந்தினி, அஜந்தா, சுபாகு ஆகியோரின் அன்பு மாமனாரும் தயாளன் - சுகன்யா, சஞ்சீவ் - சிந்துஜா, ரஜீவ் - தர்சிகா, பிரணவன், கிருசாந் -அனுஷா, ரவிசாந், நிருசனன், துஷானி, அபினா, சாருஜா, பிரியாங்கன், தேனுஜா, ஜெனுசிகா, அட்சரா, அஞ்சலா, வினோதன், ஜெவீனா, விஜேத், அட்சயன், பாவனா, ஆருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் சுவர்ணவி, சுஜேத், சாத்வீகா, அனுசாந் ஆகியோரின் பூட்டனும் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை, பூரணம் மற்றும் சரவணமுத்து, நவரத்தினம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சரவணமுத்து- பரமேஸ்வரி, சின்னையா - இரத்தி னேஸ்வரி, பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் தவம் - ஸ்ரீபதியின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.02.2021) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-1377)

021 226 2885

தகவல்:-
செ. செல்வலிங்கம்
ஜெ. சுபாகு

## மரண அறிவித்தல்

பிறப்பு
17 - 05 - 1958



இறப்பு
07 - 02 - 2021

### நித்தியானந்தம் லங்கநாதன்

அம்பன், குடத்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நித்தியானந்தம் லங்கநாதன் நேற்று (07.02.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நித்தியானந்தம் - கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும் தர்சினியின் அன்புக் கணவரும் தாரணி, ராஜனா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற நகுலேஸ்வரி, கிரிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.02.2021) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1379)

அம்பன்,
குடத்தனை.

077 736 1932
077 608 6237

தகவல்:-
குடும்பத்தினர்

# சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்க்கவே பொத்துவில் முதல் பொலிகண்டிவரையான பேரணி

## இவர்கள் நினைப்பது எதுவும் நடக்காது என்கின்றார் சரத் வீரசேகர

**(கொழும்பு)**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் இடம் பெறவுள்ள நிலையில் சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தமிழ் அரசியல்வாதிகள் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியை நடத்தினர். இவ்வாறான செயற்பாடுகளினால் அர சாங்கத்தை பலவீனப்படுத்த முடியாது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர இறுமாப்பாகத் தெரிவித்தார்.**

இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட தருஸ்மன் அறிக்கையில் பல பொய்யான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை மெக்வெல் பரணகம ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.



இலங்கைக்கு எதிராக தடைகளை பிறப்பிக்கும் அதிகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் ஆணையாளருக்கு கிடையாது. இம்முறை பலமான நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக செயற்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு எதிராக சர்வதேச அரங்கில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு கடந்த அரசாங்கம் இணையனுசரனை வழங்கியமை அனைத்து பிரச்சினைகளுக்கும் மூல காரணியாக அமைந்தது.

நாட்டின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் கொண்டு வரப்பட்டன. இதற்கு நல்லாட்சி அரசாங்கமும் ஆதரவு வழங்கியது. இதனால் அதுவரை காலமும் இலங்கைக்கு சார்பாக செயற்பட்ட நாடுகள் பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் அமைதி காத்தது.

கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிராக செயற்பட்ட நாடுகள் தற்போது இலங்கைக்கு ஆதரவாக செயற்பட தீர்மானித்துள்ளன. ஆகவே இம்முறை பலம் கொண்ட நாடுகள் இலங்கைக்கு சார்பாக இருக்கும். இலங்கைக்கு எதிராக தடைகளை விதிக்கும் அதிகாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு உண்டு. ஆகவே மனித உரிமை பேரவை முன் வைக்கும் விடயங்களை சுயாதீனமான முறையில் ஆராயும் உரிமை இலங்கைக்கு உண்டு. இவ் விடயத்தில் எத்தரப்பினருக்கும் அடிபணிய வேண்டிய தேவை கிடையாது என அமைச்சர் சரத் வீரசேகர இறுமாப்பாகத் தெரிவித்துள்ளார். (நி-4)

### ஐ.நா அறிக்கை தொடர்பான

# அரசாங்கத்தின் எதிர்ப்பு எழுத்து மூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரினால், இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பான அரசாங்கத்தின் எதிர்ப்பை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திற்கு எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்று முன்தினம் சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர், ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏதாவது இடம் பெற்றால் நாட்டின் அரசியலமைப்புக்கு அமைய மாத்திரமே அது குறித்து செயற்பட முடியும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரை கொரோனா பரவல் காரணமாக இணையவழி காணொளி முறையில் முன்னெடுப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டம் இத்துடன் முடிவடையாது

## சிறீதரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போராட்டம் இத்துடன் முடிவுறுத்தப்படாமல் தொடர்ச்சியாக இன்னும் சில மாதங்களில் வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் தேசிய விடுதலை வரலாற்றிலே இது ஒரு முக்கியமான மைல்கல்.

ஆயுதவிடுதலை போராட்டத்திற்கு பிற்பாடு நிறைந்த நெருக்கடிகள், அடக்கு முறைகள், தமிழ் மக்களிற்கு எதிரான வன்முறை, கொடுமைகள் இவற்றையெல்லாம் தாண்டி பல்வேறுபட்ட போராட்டங்கள் நடைபெற்றிருந்தாலும் கூட, வரலாற்று ரீதியாக கொண்டு வரப்பட்டிருக்கின்ற, வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புகளின் ஏற்பாட்டிலே முன்னிலைப்படுத்தப்படுகின்ற இந்தப் போராட்டம் முக்கிய பாத்திரத்தை கொண்டுள்ளது.

குறிப்பாக வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் தேசிய எழுச்சியையும் தேசிய இருப்பையும் இது முன்னிலைப்படுத்தியிருக்கின்றது.

இந்த போராட்டம் இத்துடன் முடிவுறுத்தப்படாமல் தொடர்ச்சியாக இன்னும் சில மாதங்களில் வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (நி-4)

# நாட்டில் புற்றுநோயாளர்கள் அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நாளாந்தம் பதிவாகும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளாந்தம் சுமார் 80 புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாகவும் புற்றுநோய் காரணமாக நாட்டில் வருடாந்தம் 15 ஆயிரம் உயிரிழப்புகள் பதிவாகுவதாகவும் தேசிய புற்றுநோய் ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர், பொதுச் சுகாதார விசேட வைத்திய நிபுணர் ஜானகி விதான பத்திரன தெரிவித்துள்ளார்.

புகையிலை, மதுபான பாவனை, முறையற்ற உணவுப் பழக்கவழக்கம் உள்ளிட்ட காரணிகளால் புற்றுநோய் ஏற்படுவதாகவும் வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் வருடாந்தம் பதிவாகும் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து செல்கின்றது. கடந்த 5 வருடங்களைப் பார்த்தோமானால், ஒவ்வொரு வருடமும் சுமார் 30,000 பேர் புதிதாக புற்றுநோயாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர்.

நாளொன்றில் பதிவாகும் நோயாளர்களின் எண்ணிக்கை பார்த்தோமானால், நாளாந்தம் 80 பேர் வரையில் புற்றுநோயுடன் அடையாளம் காணப்படுகின்றனர்.

இது மிகவும் பாரிய பிரச்சினையாகும். ஏனைய உலக நாடுகளை போன்று இலங்கையிலும் உயிரிழப்பிற்கான இரண்டாவது முக்கிய காரணியாக புற்றுநோய் அமைந்துள்ளது. அதேபோன்று இலங்கையில் பெண்கள் மத்தியில் அதிகமாக மார்பக புற்றுநோயே காணப்படுகின்றது.

பெரும்பாலான ஆண்களுக்கு வாய்ப் புற்றுநோய் ஏற்படுகின்றது. புகையிலை, மதுபானம், வெற்றிலை, பாக்கு பயன்படுத்துதல் ஆகியன வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கான பிரதான காரணியாக அமைந்துள்ளது.

வருடாந்தம் நாட்டில் 15 ஆயிரம் பேர் புற்று நோயினால் உயிரிழக்கின்றனர் என பொது சுகாதார விசேட வைத்திய நிபுணர் ஜானகி விதான பத்திரண தெரிவித்துள்ளார். (நி-4)

# பொத்துவில் முதல் பொலிகண்டிவரை நீதிக்கான பேரணி
# மக்களின் கோஷங்களால் அதிர்ந்தது யாழ்ப்பாணம்
























படங்கள்: ரவிசாந், சிவசாந்தன்


# 29 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## இ.ச.பேரம்பலம் (E.S.P)

(வாரிவளவு, காரைநகர்)

[துவாதசி திதி: 08.02.2021)



அன்பின் திருவுருவே!
அனுபவப் பெட்டகமே!
அரவணைத்து எம்மை வளர்த்து
வணிகத்துறையில் வழிகாட்டி
ஆலமரமாய் அறிவுலகம்
போற்ற வாழவழிவகுத்த
தெய்வமே!
இருபத்தொன்பதாவது ஆண்டில்
இன்று போல் இருக்கிறது
அன்று நீங்கள் சொன்ன
வார்த்தைகள் என்றுமே எம்
சிரம் மேற்கொண்டு பார் போற்ற
வாழ்கின்றோம்
விண்ணுலகில் இருந்து
ஆசிவழங்கும்
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்திபெற
எல்லாம்வல்ல வாரிவளவு
கற்பக விநாயகர் பாதம்
பணிந்து நிற்கின்றோம்

(5524)

383, மணி ஓசை,
கோவில் வீதி, நல்லூர்.

கல்விக் காருண்யன்
லயன் E.S.P. நாகரத்தினம் (PMJP)
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## இராமச்சந்திரன் வைகுந்தவாசன்



யாழ்.பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன் வைகுந்தவாசன் அவர்கள் 06.02.2021 சனிக்கிழமை அன்று அகால மரணம் அடைந்தார்.

அன்னார் இராமச்சந்திரன்- ரஞ்சினி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், கலாரஞ்சன்- அன்னலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், நளாயினி அவர்களின் ஆருயிர் கணவரும், நிஷ்மி, பிருத்விகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரஞ்சன், நேருஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ராதிகா, ஜெயரூபன், கஜேந்திரன், கஜதீபன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் நிஷா அவர்களின் சகோதரரும், ஆதித்தன், அனன்ஜா, கஜி, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிசாந்தினி அவர்களின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.02.2021 இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் பொன்னாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மதியம் 12.00 மணியளவில் பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(5569)

மூளாய்.

தகவல்:- குடும்பத்தினர்.

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## சந்திரசேகரம் சந்திரகுமார்

(ராசன்)

பிறந்த திகதி 1955 . 12 . 28

இறந்த திகதி 2021 . 01 . 12

திதி:-2021.02.11

அன்பாய் எம்மை அரவணைத்த
தெய்வம் நீங்கள்
எம்மையெல்லாம் தவிக்க விட்டு
எங்கே சென்றீர்கள்
நீங்கள் இல்லாத நாம்
தவிக்கும் தவிப்பை யார் அறிவார்.

கடந்த 12.01.2021 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்.சந்திரசேகரம் சந்திரகுமார்
அவர்களின் அந்தியேட்டிக் கிரியை 09.02.2021
நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில்
கீரிமலை தீர்த்தக் கரையில் இடம்பெற்று, 11.02.2021
வியாழக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது
இல்லத்தில் சபிண்டீகரண கிரியை இடம்பெறவுள்ளது.
அந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(5556)

இல.377, இரணைமடுச் சந்தி,
கிளிநொச்சி.

077 405 0654

தகவல்:-
மனைவி நந்தா, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

# யாழ்.ஆயரைச் சந்தித்தார் கல்வி அமைச்சர் பீரிஸ்



(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ்நேற்று முன்தினம் மாலை யாழ்.ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை யாழ் ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

மேற்படி சந்திப்பில் பேசப்பட்ட பல விடயங்களின் மத்தியில் முக்கிய விடயங்களான இன்றைய கல்வி நிலை - இனப்பிரச்சினையின் இன்றைய நிலை மற்றும் அதிகாரப்பரவலாக்கம் என்பன பற்றிப் பேசினர். (5-4)

## மத்தியஸ்தர் சபை அமர்வுகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மத்தியஸ்தர் சபை அமர்வுகள் இதுவரை நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது. எதிர்வரும்14 ஆம்திகதிஞாயிறு முதல் யா/சன்மார்க்க ம.வித்தியாலயத்தில் நடைபெறும் என தவிசாளர் தெரிவித்துள்ளார்.(5-4-106)

# சுவர்கள் அமைப்பதை விடுத்து பாலங்களை அமைப்போம்

(சாவகச்சேரி)

**தடைகள் மற்றும் தடுப்புச் சுவர்களைத் தகர்த்தெறிந்து உறவுப் பாலத்தை அமைப்போம் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் சனிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர்மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கம் எந்த விதமான பாகுபாடும் இன்றி கல்வி மற்றும் விவசாயத் துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கத் தீர்மானித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாய பீடம்,பொறியியல் பீடம் மற்றும் தொழில்நுட்ப பீடம் ஆகியன உள்ளன. கிளிநொச்சியின் அபரிமிதமான வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ளோம்



என்பதற்கு எடுத்துக்காட்டு. ஜனாதிபதியின் தொலைநோக்கு எந்தவிதமான பாகுபாடும் இன்றி கல்வித்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதே.நாங்கள் உங்களோடு சேர்ந்து நடப்போம். ஒவ்வொரு அடியும் சேர்ந்து வைப்போம். எமது அடிப்படைச் சிக்கல் எதுவென ஆராய்ந்தால் நாங்கள் தடுப்புச் சுவர்களை அமைத்துக் கொள்கிறோம்.

ஒருவரோடு ஒருவர் உறவு கொள்வதற்கான பாலத்தை அமைக்கத் தருகிறோம். 'அதற்கு அடிப்படையாக மொழிப் பிரச்சினை இருக்கக்கூடும். மொழியைக் கடந்து உறவை வளர்ப்போம். மொழி ஒரு சிக்கலாக இருந்தாலும் அன்பு வழியில் வளருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-30)

# சாவகச்சேரியில் பேரணிக்கு அமோக ஆதரவு

(சாவகச்சேரி)

இன அடக்குமுறைகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணி நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தென்மராட்சி பிரதேசத்தை வந்தடைந்தது.

இதன்போது சாவகச்சேரி பகுதியில் பேரணியில் கலந்து கொண்டவர்கள் தீப் பந்தத்தை ஏந்திய வண்ணம்.மத ஆராதனைகளில் ஈடுபட்டு பின்னர் யாழ்.நோக்கி தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

இதன் போது "ஒற்றையாட்சி வேண்டாம்.கோட்டா அரசே வெளியேறு, இராணுவமே வெளியேறு" போன்ற கோஷங்களை எழுப்பியிருந்தனர். பேரணியில் வேறுபாடின்றி பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு அமோக ஆதரவினை அளித்திருந்தனர். (5-4-30)

# விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசிவேண்டி விசேட வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை மறுதினம் 10 ஆம் திகதி புதன் கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் ஈசான பாகத்தில் அமைத்துள்ள சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் சந்நிதான பிரதம குருக்கள் ராஜஸ்ரீ சிவ. கமல்ராஜ்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

# நெடுந்தீவில் வெளிச்சவீடு அமைத்து தருமாறு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பகுதியில் நான்கு இடங்களில் வெளிச்ச வீடுகளை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படுகின்ற நெடுந்தீவு பிரதேசத்தில் 700 இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தொழிலுக்கு செல்லும் தொழிலாளர்கள் இரவு நேரங்களில் கரை திரும்புவது பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கரையோரப் பகுதிகளில் முக்கியமான இடங்களில் வெளிச்ச வீடுகளை அமைத்துத் தருமாறும் கோரியுள்ளனர்.

யாழ்.நெடுந்தீவு கரையோரப் பகுதிகளில் அதாவது செபநாயகபுரம், பெரியதுறை, பனாங்காணி, குயிந்தா ஆகிய நான்கு இடங்களிலும் இந்த வெளிச்ச வீடுகளை அமைப்பதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு இருப்பதாகவும் எதிர்காலத்தில் அவற்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (5-4-315)




## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு சந்தாதோட்டம் அருள்மிகு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17.02.2021 புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மாசி மகத் தீர்த்தத்துடன் நிறைவடையும் என ஆலய தர்ம பரிபாலன சபை செயலாளர் இ.கிருபாகரசூரியன் அறிவித்துள்ளார். (5-4)



டெங்கு மற்றும் கொரோனா வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் நேற்று இராணுவத்தினரால், துப்புரவு செய்யப்பட்டது. யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி பிரியந்த பெரேராவின் பணிப்புரைக்கு அமைவாக, யாழ்.512 ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் தலைமையிலான இராணுவத்தினரால் துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட்டதுடன், கொரோனாத் தொற்று ஏற்படாத வகையில், கிருமி தொற்று நீக்கமும் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் புகையிரத அதிபர் பிரதீபன் மற்றும் இராணுவக் கட்டளை அதிகாரிகள் ஆகியோரின் மேற்பார்வையில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச அரங்கில் இலங்கை மீண்டும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

கிழக்கு முனைய விவகாரத்தில் ஏற்பட்ட சுமுகமற்ற நிலை காரணமாக இந்தியா வழங்கிய கடன் தொகையை உடனடியாக மீளச் செலுத்துமாறு அறிவித்துள்ளது.

தற்போது இலங்கையில் உள்நாட்டு நெருக்கடி மாத்திரமின்றி சர்வதேச நெருக்கடிகளும் ஆரம்பமாகியுள் ளன. சர்வதேச அரங்கில் மீண்டும் இலங்கை தனிமைப்படுத்தப்படக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், சுதந்திர தின உரையை போன்றல்லாது பொது ஜன பெரமுனவின் வருடாந்த சம்மேளனத்தில் ஆற்றும் உரையாகவே காணப்பட்டது. நாடு தொடர்பில் பொதுவாக பேசாமல் வழமையைப் போன்று அரசியல் பேசுகின்றார். அவரது உரையிலிருந்தே நாட்டின் எதிர்காலத்தை அறிந்து கொள்ள முடியும்.

தற்போது உள்நாட்டு நெருக்கடி மாத்திரமின்றி சர்வதேச நாடுகளுடனான நெருக்கடிகளும் தோற்றம் பெற்றுள்ளன. மீண்டும் எமது நாடு சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்தப்படும் நிலைக்கு தள்ளப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4)

# மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கான தேவை அரசாங்கத்துக்கு கிடையாது-ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

(கொழும்பு)

மாகாண சபை தேர்தலை பிற்போடுவதற்கான தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. கொவிட்-19 வைரஸ் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பின்னர் பொதுத்தேர்தலை நடத்தியதை போன்று பாதுகாப்பான முறையில் மாகாண சபை தேர்தலையும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணத்தை தவிர ஏனைய மாகாணங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும் என நெடுஞ்சாலை அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் நோக்கில் எதிர்க்கட்சியினரும், அரச சார்பற்ற அமைப்புக்களும் கூட்டணியமைத்து அரசாங்கத்துக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கொள்கை அடிப்படையில் ஆட்சியமைத்துள்ளார்.

ஆகவே வெறுப்பு பேச்சுக்களினால் அரசாங்கத்தை எவராலும் பலவீனப்படுத்த முடியாது.

மக்களின் ஜனநாயக உரிமைக்கு புறம்பாக அரசாங்கம் செயற்படுவதாக முன்வைக்கும் குற்றச்சாட்டை ஏற்க முடியாது. மார்ச் மாதம் மாகாண சபை தேர்தலை நடத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்தது. மார்ச் மாதம் முதல் வாரத்தில் தேர்தலை நடத்த அமைச்சரவை மட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்பாராத வகையில் கொவிட்-19 வைரஸ் தாக்கத்தின் இரண்டாம் சுற்று தீவிரமடைந்த காரணத்தினால் தேர்தலை தற்காலிகமாக பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் மாகாண சபை தேர்தலை நடத்துவதை காட்டிலும், பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது முக்கியமானதொன்றாக கருதப்பட்டது.

மேலும், தேர்தலை கண்டு அஞ்ச வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது.

2018ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அப்போதைய அரசாங்கம் அடைந்த தோல்வி மாகாண சபை தேர்தலை காலவரையறையின்றி பிற்போடுவதற்கு பிரதான காரணியாக அமைந்தது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் சுபீட்சமான எதிர்கால கொள்கைத்திட்ட செயற்றிட்டங்கள் தாமதிக்கப்பட்டுள்ளன. தற்போது முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகளை துரிதமாக நிறைவு செய்யுமாறு அனைத்து தரப்பினருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் எனத் தெரிவித்தார். (நி-4)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த விவாகரத்துப் பெற்ற 47 வயது நிரம்பிய அரச உயர் பதவி வகிக்கும் மணமகனுக்கு 35 வயதிற்குட்பட்ட நற்குணங்கள் நிரம்பிய மணமகள் தேவை. சீதனம் வேண்டப்படாது.

தொடர்பு: 077 197 7564 (5553)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## PEARSON INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Academic
IELTS General
IELTS Life skills.

# Weekday classess
# Weekend Classess
# Personal Classes
# Group Classes
# Lecturers are above band 8 years and professionally qualified

98% Students in IELTS Scored above 6.5
Learn the techiniques to score above 6.0
Unbeatable Success rate in Northern Province

Registered Exam Centre for IELTS
Special discounts for upcoming registration
074 188 7878 infopearsoncollege@gmail.com
idp IELTS
No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, Jaffna


# வெளிநாட்டு துப்பாக்கி,கைக்குண்டுடன் மூவர் கைது,ஒருவர் தப்பியோட்டம்

(கொழும்பு)

கடவத்தை, பதவியா மற்றும் தொணியகல ஆகிய பிரதேசங்களில் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது கைக்குண்டு, வெளிநாட்டில் தயாரிக்கப்படும் துப்பாக்கி உள்ளிட்டவற்றுடன் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)


## பிறந்த தின நல்வாழ்த்துக்கள்

தென்புலோலியூர் மொழி ஞாயிறு உயர்திரு.
க.சி.சிவசுப்பிரமணியம்
(பிரபல ஆங்கில விரிவுரையாளர்)

இன்று 8 ஆம் திகதி தனது 77 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் தென்புலோலியூர் கந்தமுருகேசனார் வீதியைச் சேர்ந்த கல்விமான் திருவாளர் சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம் அவர்களை மாண்புடன் வாழிய வாழிய என்று வாழ்த்துவமே!

அன்பின் உறைவிடமாய்!
அறிவில் பெருங்கடலாய்!
பாசத்தின் திருவுருவாய்!
பார் போற்றும் ஆசானாய்!
அந்த பெருந்தகை இப்பூமியில்
உதித்திட்ட இந்த பொன்னான திருநாளில்
அவர் நிறைந்த ஆயுள் ஆரோக்கியத்துடனும்
உளவளத்துடனும் மனம் நிறைந்த
மகிழ்வுடனும் சகல சௌபாக்கியங்களும்
பெற்று நீடூழி வாழ வேண்டும் என்று மனமார
பிரார்த்தித்து எல்லாம் வல்ல இறைவனின்
திருப்பாதங்களை வணங்கி தாள் பணிகின்றோம்.




Best wishes

அன்பு மனைவி,மகள்,மருமகன்,
ஆசைப் பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்,நண்பர்கள்,
மாணவ மாணவிகள்.

கந்த முருகேசனார் வீதி,
புலோலி தெற்கு.

(5545)


# குற்றவாளிகளின் ஒளிப்படம் இனி ஊடகங்களில் வெளிப்படும்

(கொழும்பு)

குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டு நீதிமன்றினால் குற்றவாளிகளாக அறிவிக்கப்படுகின்றவர்களின் ஒளிப்படங்கள், ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வு பெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

"மகிழ்ச்சியான குடும்பம், ஒழுக்கம் மற்றும் அச்சமற்ற சமூகம்" எனும் தொனிப் பொருளின் கீழ் பொது மக்கள் பாதுகாப்பு குழுவை நிறுவுவதற்கான வேலைத்திட்டம் நேற்று ஆரம்பிக்கப் பட்டது.

உலகில் முன்னேற்றமடைந்த நாடுகளில் குற்றங்களை தவிர்ப்பதற்காகவும் பல்வேறு முறைகேடுகளை தடுக்கும் நோக்கிலும் அறிமுகப்படுத்தப்படும் இந்த சமூக பொலிஸ் முறைமைக்கு பொது மக்கள் பாதுகாப்பு குழு என பெயரிடப்பட்டுள்ளது.

இதனூடாக பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# பெரிய வெங்காய உற்பத்தியை அதிகரிக்க தீர்மானம்



(கொழும்பு)

நாட்டின் மொத்த தேவையில் பெரிய வெங்காயம் மாத்திரமே இலங்கையில் 22 சதவீதம் உற்பத்தி செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதனால், நாட்டிற்கு தேவையான ஏனைய பெரிய வெங்காயத்தினை இறக்குமதி செய்வதாகவும் இதற்கு 12 முதல் 15 பில்லியன் வரையில் செலவிடப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இத்தகைய பெரிய வெங்காய உற்பத்தியை 35 வீதமாக உயர்த்த வேண்டும் என விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது. (நி-4)

# மீன்பிடியியல் கற்கை பீடம் விரைவில் ஆரம்பிக்கப்படும்

(அக்கராயன்)

**கிளிநொச்சி அறிவியல்நகர் பல்கலைக்கழகத்தில் நகர திட்டமும், மீன்பிடியியல் கற்கை பீடமும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று, கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான டகிளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**



யாழ்.பல்கலைக்கழக அறிவியல்நகர் வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவசாய ஆராய்ச்சிநிலையத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இப்பகுதியில் பல்கலைக்கழகம் மாத்திரமன்றி, அதன் சுற்றுவட்டாரத்தில் மிகப்பெரும் ஆடைத் தொழிற்சாலைகள், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், மத்திய வங்கியின் பிராந்திய காரியாலயம், மற்றுமொரு தனியார் நிறுவனத்தின் விவசாய உற்பத்தி பதனிடல் தொழிற்சாலை என பல விடயங்கள் ஆரம்பமாகி, இந்தச் சுற்றுவட்டாரம் ஒரு கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப மையமாக பெருவளர்ச்சி கண்டிருக்கிறது எனத் தெரிவித்தார்.

இவற்றுக்கு மேலதிகமாக, இந்தப் பகுதியில் வடக்கு மாகாண விவசாயிகளின் உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித்தரும் விவசாய பொருளாதார மத்திய நிலையம் ஒன்றும் விரைவில் ஆரம்பிக்கப்பட விருக்கிறது எனவும் தெரிவித்தார்.

அதேபோல், யாழ்.பல்கலைக்கழகத்தின் மற்றுமொரு கோரிக்கையாக இருந்துவரும் மீன்பிடி மற்றும் கடல்சார் விஞ்ஞானக் கற்கைகள் பீடத்தை விரைவில் முல்லைத்தீவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், கல்வியமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகிர சுகியாமா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, ஜப்பானிய ஜைகா நிறுவன பிரதிநிதிகள், பல்கலைக்கழகப் பீடாதிபதிகள், பேரவை உறுப் பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-350)

## மனைப் பொருளியல் கண்காட்சி

(அக்கராயன்)

வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டிலும் கரைச்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டிலும் மனைப் பொருளியல் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சி நாளை மறுதினம் 10 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு பொது மண்டபத்தில் நடைபெறும் (5-4-350)

# அழிவடைந்த நெல்வயல்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவில்லை

## விவசாயிகள் கவலை

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மற்றும் குஞ்சுக்குளம் ஆகிய பகுதிகளில் உவர் நீர் உட்புகுந்து பெருமளவான வயல் நிலங்கள் அழிவடைந்த போதும் அதற்கான இழப்பீடுகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்

வன்னேரிக்குளம் மற்றும் குஞ்சுக்குளம் ஆகிய பகுதிகளில் சுமார் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் கடல் பெருக்கெடுத்தமை மற்றும் உவர்த்தன்மை காரணமாக குஞ்சுக்குளம் தீக்காய், வன்னேரிக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் நெல்வயல்கள் அழிவடைந்துள்ளன.

ஆனால் அழிவடைந்த வயல்களுக்கு இழப்பீடு எதுவும் வழங்கப்படவில்லை என்றும் இதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமது வயல் நிலங்களை உவர்நீர் அழிவுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் உவர்நீர்த் தடுப்பணை அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்ற போதும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தடுப்பணைகள் அமைக்கப்படாத நிலையில் பாதிக்கப்படும் தமக்கு நட்டஈடுகளை பெற்றுத்தர சம்பந்தப்பட்ட தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-315)

# பேருந்து சேவை ஆரம்பிக்குமாறு பெற்றோர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி கண்ணகைபுரத்திற்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்தை நாள்தோறும் சேவையில் ஈடுபடுத்துமாறு இக்கிராமத்தில் வாழ்கின்ற பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கண்ணகைபுரம் கிராம உத்தியோகத்தர் ப.சபாரட்ணம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கிராம மட்ட கலந்துரையாடலில் இக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1972ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்குடியேற்றத் திட்டத்தில் சுமார் 350 குடும்பங்கள் வாழ்கின்றன.

உயர்தர வகுப்புகளிற்கு 7 கிலோமீற்றரில் உள்ள அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கும் மாணவர்கள் நடந்து செல்கின்றனர்.

இந்நிலையில் இலங்கை போக்குவரத்து சபையினர், மாணவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று வரக்கூடிய வகையில் பேருந்து சேவைகள் நடத்த வேண் டும் என கூட்டத்தில் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் கரைச்சி பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சுரேஸ், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சு.தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-350)

# கொரோனாவால் இறந்த வைத்தியருக்கு அஞ்சலி



(நெளுக்குளம்)

கொரோனா தொற்றினால் உயிரிழந்த வைத்தியர் கயான் தந்தநாராயணவிற்கு வவுனியாவில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்விருட்சம் அமைப்பின் தலைவர் ச.கண்ணன் தலைமையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் வவுனியா அரச அதிபர் சமன் பந்துலசேன, வைத்தியர்களான சுதாகரன், மதுரகன், நகரசபை உறுப்பினர் ரி.கே.ராஜலிங்கம், சிறுவர் நன்னடத்தை அதிகாரி கெனடி, ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-299)




# நீர்ப்பாசன செழுமை வேலைத் திட்டத்தில் குளங்கள் புனரமைப்பு ஆரம்பம்

(நெளுக்குளம்)

நாடு பூராகவும் 5000 குளங்களை புனரமைக்கும் ஜனாதிபதியின் நீர்ப்பாசன செழுமை வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 100 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வானது நேற்று முன் தினம் வவுனியா செட்டிகுளம் பெரிய தம்பனை ஆலடிக் குளத்தில் இடம்பெற்றது. இக்குள மானது 10 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட வுள்ளது.

வவுனியா மாவட்ட செயலாளர் சமன் பந்துலசேன தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம்.சாள்ஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.



இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன், பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் காதர் மஸ்தான் மற்றும் நீர்ப்பாசன திணைக்கள பணிப்பாளர் நாயகம் கே.டி. நீகால் சிறிவர்த்தன, கமநல அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் நாயகம் எச்.எம்.எல். அபேரத்ன, செட்டிகுளம் பிரதேச சபைத்தலைவர் சு.ஜெகதீஸ்வரன், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இ.பிரதாபன், வவுனியா நகர பிரதேச செயலாளர் கமலதாஸன் மற்றும் கமக்கார அமைப்புக்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர். (5-4-299)

# இராசிபலன்

08.02.2021
தை 26, திங்கட்கிழமை
துவாதசி பின்னிரவு 3.42 மணிவரை
மூலம் பிற்பகல் 3.51 மணிவரை
சுபநேரம் 12.35 - 2.05 மணிவரை
இராகுகாலம் 8.05 - 9.35 மணிவரை
சந்திராஷ்டமம்:-கார்த்திகை, ரோகினி
வைஷ்ணவ ஏகாதசி விரதம்

வளவன்


மேஷம்

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும்.


ரிஷபம்

குடும்பத்தில் சிறு சிறு முரண்பாடுகள் தோன்றி மறையும், வெளியூர் பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், விரயங்கள் மேலோங்கும் நாள், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.


மிதுனம்

ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.


கடகம்

கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பலநாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


சிம்மம்

அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எண்ணங்கள் எளிதில் கைகூடும், பிள்ளைகளின் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.


கன்னி

குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


துலாம்

உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.


விருச்சிகம்

நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு.


தனுசு

சவால்களை சமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, சோம்பலை விலக்குவது நல்லது, திடீர் பயணத்தால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.


மகரம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்பது நல்லது.


கும்பம்


பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


மீனம்

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், மற்றவர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.

பொறுமையுள்ள மனிதன் நிச்சயம் வெற்றி பெறுவான்.

# தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கக்குழுவின் அங்கத்தவராக செந்தில் தொண்டமான் நியமனம்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய, நாட்டின் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க குழுவிற்கான நியமனங்கள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த விசேட குழுவை நீதியமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி நியமித்துள்ளார். இவ் அதி உயர் குழுவில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக உள்வாங்கப்பட்டுள்ள செந்தில் தொண்டமானுக்கான நியமனத்தை நீதியமைச்சர் அலி சப்ரி வழங்கியுள்ளார்.

இலங்கையைப் பொறுத்த வரையில், தேசிய ஒருமைப்பாட்டையும், நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்புவது அதி முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

பல்லினச் சமூகங்களைக் கொண்ட மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால், தேசிய நல்லிணக்கமும், தேசிய ஒருமைப்பாடுமே அந்த நாடுகளை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் சென்றுள்ளன.

இதற்கமையவே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்தக் குழுவை நியமிப்பதற்கான ஆலோசனைகளை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், இந்தக் குழுவின் அங்கத்தவர்களாக உயர்நிலை பிரதிநிதிகள் உள்வாங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(நி-4)

# குற்றவாளிகளுக்கு இருவாரங்களில் தண்டனை நிச்சயம் - மகிந்தானந்த

(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி மோசடி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு எதிர்வரும் ஓரிரு வாரங்களில் நிச்சயம் தண்டனை வழங்கப்படும். அதன் மூலம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படும் என கமத்தொழில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டோருக்கு தண்டனை வழங்கப்படாமையால் நாம் தோல்வியடைந்துவிட்டதாகக் கூறுகின்றனர். அவ்வாறு அரசாங்கத்தின் மீது குற்றம்சுமத்துபவர்களுக்கு ஒரு விடயத்தை கூறிக் கொள்ள விரும்புகின்றோம். கடந்த அரசாங்கத்தில் மத்திய வங்கி பிணை முறி மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக இரு வாரங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் தொடர்புடையோருக்கு நிச்சயம் தண்டனை வழங்கப்படும். அதே போன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும். எதிர்வரும் ஓரிரு வாரங்களில் இது நிச்சயம் நடைபெறும் என்றார்.(நி-4)

# வரலாறுகளை திரிவுபடுத்துவது தேரர்களின் பண்பல்ல

## இரா.துரைரத்தினம் தேரருக்கு பதிலளிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியினால் தொல்பொருள் இடங்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட செயலணி உறுப்பினரான எல்லாவல மேதானந்த தேரர் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் புனிதத் தலங்கள் பௌத்த மதத்திற்குரியதெனத் தெரிவித்த கருத்தை நிராகரிப்பதாக கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் இரா. துரைரத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வடக்கு-கிழக்கில் தமிழர்களே வாழவில்லை எனவும் 99 வீதம் பௌத்த விகாரைகளே இருந்ததாகவும் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் புனிதத் தலங்கள் பௌத்த மதத்திற்குரியதாகுமென தமிழர்களின் கலாசார ரீதியான வரலாற்றைத் திரிபுபடுத்திக் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இப்படிப்பட்ட ஒருவரை ஜனாதிபதி செயலணியில் நியமித்து இலங்கையில் இனங்களுக்குள் பகை முரண்பாட்டைத் தோற்றுவிப்பதற்கு வழி சமைக்கும்.

தமிழர்களை நிம்மதியாக இலங்கையில் வாழ விடாமல் ஒரு பௌத்த மதகுரு தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை முன்வைப்பது மதகுருவிற்கான பண்பாக இருக்க முடியாது என அவர் தெரிவித்தார்.(நி-4)

# தேயிலை விலையில் மாற்றம்

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதத்தில் தேயிலையின் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் தேயிலை ஒரு கிலோ கிராமின் விலை 645 ரூபாய் 2 சதமாக காணப்பட்டுள்ளது.

இது கடந்த வருடம் ஜனவரி மாதத்துடன் ஒப்பிடும் பொழுது 56 ரூபாய் 17 சதவீதத்தினால் ஏற்பட்ட உயர்வு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சாத்தையா சின்னையா

திதி:- அபரபட்ச துவாதசி (08.02.2021)



தோற்றம்: 22.05.1929
மறைவு: 21.01.2020

கருணை மிகு பண்பதனால்
கருத்தில் நின்றீர்
கண்ணிமைபோல் எமக்கிருந்து
காவல் செய்தீர்
பெருமையுறப் பேணி எமைப்
பாதுகாத்தீர் - பின்னர்
பேதலிக்க விட்டு எங்கே
மறைந்து போனீர்
அருமைமிகு இறையடியில்
நின் ஆன்மா - என்றும்
ஆறுதல் பெற இறைஞ்சுகிறோம்
இறையருளை.

என்றும் உங்கள் நினைவுடன்
மனைவி, மகன்மார், மகள்மார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல.2048/13, தருமபுரம், பரந்தன்.
தகவல்:- மகன் சி.கந்தசாமி (வசந்தா)

# வயல் நிலங்களை அதிகரிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

**நீர்ப்பாசன திட்டங்களை ஏற்படுத்தி விளைநிலங்களை அதிகரிக்கும் பல்வேறு செயற்றிட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.**

வவுனியாவில் குளம் புனரமைப்பு திட்டம் ஒன்றை நேற்று ஆரம்பித்து வைத்து விட்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நாட்டின் தேசிய உற் பத்திக்கு ஊக்கமளிக்கின்ற சிந்தனையின் வெளிப்பாடாக இத்தகைய திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒருகாலத்தில் அரிசி உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நாடு இது. இதற்கு முதல் அரிசியை பெருமளவில் இறக்குமதி செய்திருந்த நிலைமையையும் நாம் கண்டிருக்கிறோம்.

அந்தவகையில் விவசாயப்புரட்சி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதனை அடிப்படையாக கொண்டு ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் ஒரு திட்டமே இது. தற்போது மாகாண விவசாய திணைக் களத்திலே ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எமக்கு அனுமதி கிடைத்துள்ளது. அதனை செய்துவருகிறோம்.

இதன் மூலம் விவசாய திணைக்களத்தின் சேவைகள் மேலும் மேம்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இவ்வாறு நீர்ப்பாசனம் மட்டுமல்லாமல் விவசாயம், விவசாயப்பொருட்களை சந்தைப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக மாகாண நிர்வாகமும் மத்திய அரசுடன் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்



டிருக்கிறன. மேலதிகமாக நீர்த்தேக்க திட்டங்களை அமைப்பதற்கும் அதனூடாக குடிநீர் வழங்குதல் மற்றும் விளைநிலங்களை அதிகரிப்பதற்குமான செயற்றிட்டங்களையும் மத்திய அரசும் மாகாணசபையும் இணைந்து முன்னெடுக்க விருக்கின்றன.

எனவே இவற்றை முழுமையாக பயன்படுத்தி அதன் பயனை அடைய வேண்டும். இதற்கு மாகாண நிர்வாகம் அர்ப்பணிப்புடன் செயற்படும் எனத்தெரிவித்தார்.(5-4-299)

# மன்னார் மறை மாவட்டத்தின் காணி பகிர்ந்தளிக்கப்பட்டது



(மன்னார்)

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பூமலர்ந்தான் பகுதியில் மன்னார் மறை மாவட்டத்திற்கு சொந்தமான ஒரு தொகுதி காணி மன்னார் மறைமாவட்ட ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் தலைமையில் 11 குடும்பங்களுக்கு உறுதி காணியாக ஆயர் இல்லத்தினால் எழுத்துமூல உறுதியாக நேற்று பூமலர்ந்தான் தேவாலயத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பூமலர்ந்தான் பகுதியில் மன்னார் மறை மாவட்டத்திற்கு சொந்தமான காணிகளில் யுத்தத்திற்கு பின்னர் இடம் பெயர்ந்த மக்கள் பலர் குடியேறியிருந்த நிலையில் வாழ்வாதார செயற்பாடுகளையும் முன்னெடுத்திருந்தனர்.

குறித்த மக்களின் கோரிக்கைக்கு அமைவாக 11 குடும் பங்களுக்கு அவர்கள் குடியிருந்த காணிகளை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் உறுதி காணியாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (5-4-285)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய தருமபுரம் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இடியன் துப்பாக்கி ஒன்றுடன் ஒருவர் நேற்றைய தினம் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கின்சிலி கேரத் தெரிவித்தார். (5-4-316)

# குடிநீர் பெறுவதற்கு வழி செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்ணகைபுரம் கிராமத்தில் குடிநீர் இன்மையால் சுமார் 125 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கண்ணகைபுரம் கிராமத்திலுள்ள மக்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள கிணறுகள் குடிநீருக்கு உகந்ததாக இல்லை என்றும் இதனால் தமது கிராமத்திலிருந்து சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள ஸ்கந்தபுரம் கிராமத்திலிருந்தே தமக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாக தெரிவித் துள்ளனர்.

இவ்வாறு குடிநீருக்கு நெருக்கடியை எதிர்கொள்ளும் தமக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுத் தருவதற்கு உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (5-4-315)



உடுவில் மகளிர் கல்லூரியின் திறன் வகுப்பறை கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 13.350 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மது ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (5-4-316)

# நெல் தளங்கள் இன்மையால் வீதிகளில் நெல் காயவிடும் விவசாயிகள்





தற்போது பெரும்போக நெற்செய்கை அறுவடை செய்யப்பட்டு வரும் நிலையில் பொதுமக்கள் நெற் தளம் இன்றி பிரதான வீதிகளில் அதனை காயவைக்கும் நிலை காணப்படுகிறது. இவ்வாறு பொதுமக்கள் வீதிகளில் காயவைப்பதனால் வீதிகளில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் உள்ளன. விவசாயிகள் தமக்கு நெற்தளம் இன்மையாலேயே தாங்கள் பிரதான வீதிகளில் காயவைத்து வருவதாகவும் தமக்கு நெற்தளம் அமைத்துத்தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். அறுவடை செய்யப்பட்ட நெல்லை நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு போன்ற பிரதான வீதிகளில் காயவைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பிரித்தானியாவில் வாகனப் பேரணி முன்னெடுப்பு







பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பிரித்தானியாவின் வீதிகளில் மிகப் பெரும் கவனயீர்ப்பு வாகனப் பேரணி நேற்று நடைபெற்றது.

## எழுவர் விடுதலை தொடர்பில் முடிவெடுக்க எனக்கு அதிகாரமில்லை

### இதைக்கூற இவ்வளவு காலம் தேவைப்பட்டதா? என சீமான் சீற்றம்




(சென்னை)

எழுவர் விடுதலையில் முடிவெடுக்க தனக்கு அதிகாரமில்லை என கூறுவதற்கு, ஆளுநர் இவ்வளவு காலம் எடுத்துக்கொண்டது ஏன் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் சேப்பாக்கம், காட்டுப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் தனியார் துறைமுக விரிவாக்கப் பணிகளுக்கு நிலம் கையகப்படுத்தப் படவுள்ளதாக கூறப்படுகிறது.

இதுதொடர்பாக அப்பகுதி மீனவர்கள் மற்றும் விவசாயிகளை சந்தித்து, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் குறைகளை கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சீமான், விவசாய கடன்களை ரத்து செய்வது தேர்தலுக்காகவே என விமர்சித்தார்.

ஏழு தமிழர்கள் விடுதலையில் முடிவெடுக்க தனக்கு அதிகாரமில்லை என கூறுவதற்கு, ஆளுநர் இவ்வளவு காலம் எடுத்துக்கொண்டது ஏன் என்றும் சீமான் கேள்வி எழுப்பினார். (நி-4)

## உளவுத்துறை தகவல்களை ட்ரம்பிற்கு தெரிவிக்க வேண்டாம்


### பிடன் கடும் உத்தரவு

(வோஷிங்டன்)

முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில், உளவுத் துறை தகவல்கள் டொனால்ட் ட்ரம்புக்கு வழங்கப்படக் கூடாது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் உத்தரவிட்டுள்ளார்.

தனியார் தொலைக் காட்சியொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்க அரசாங்க நிர்வாகத்தில் மிக முக்கியமான உளவுத்துறை தகவல்களை முன்னாள் ஜனாதிபதிகளுக்கு தெரிவிக்கும் வழக்கம் உள்ளது.



ஆனால் தாறுமாறாக நடந்து கொள்ளும் ட்ரம்புக்கு அது தேவையில்லை என பிடன் தெரிவித்தார். (நி-4)

## பனிமலை உடைந்து திடீர் வெள்ளப்பெருக்கு

- 150 பேர் மாயம்
- உத்தரகாண்ட் மாநிலத்திற்கு விரைந்தது இராணுவம்



(டில்லி)

உத்தரகண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்தின் தபோவன் பகுதியில் உள்ள ரெய்னி கிராமத்தில் உள்ள மின் திட்டத்திற்கு அருகே ஏற்பட்ட பனிச் சரிவைத் தொடர்ந்து தௌளி கங்கா ஆற்றின் நீர்மட்டம் திடீரென கிடுகிடுவென உயர்ந்ததால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால் ஆற்றின் கரையோரம் அமைந்திருந்த பல வீடுகள் சேதமானதோடு, சுமார் 150 பேர் மாயமாகியுள்ளனர்.

"சமோலி மாவட்டத்தில் இயற்கை பேரிடர் சம்பவம் நிகழ்ந்துள்ளது. களத்தின் நிலைமையை சமாளிக்க மாவட்ட நிர்வாகம், பொலிஸ் மற்றும் பேரிடர் மேலாண்மை துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (நி-4)

## ஹவுத்தி இயக்கத்தின் பயங்கரவாத பெயரை இரத்துச் செய்ய அமெரிக்கா தீர்மானம்

(வோஷிங்டன்)

ஏமனின் மனிதாபிமான நெருக்கடிக்கு பதிலளிக்கும் விதமாக ஹவுத்தி இயக்கத்தின் பயங்கரவாத பெயரை இரத்து செய்ய அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

ஹவுத்தி இயக்கத்தை ஒரு வெளிநாட்டு பயங்கரவாத அமைப்பாக பெயரிட்ட ட்ரம்ப் நிர்வாகத்தின் முடிவுகள் மாற்றியமைக்கப்படுகிறது.

சவுதி அரேபியாவிற்கும் ஈரானுக்கும் இடையிலான பினாமி மோதலாக பரவலாகக் காணப்படும் யேமனில் சவுதி அரேபியா தலைமையிலான இராணுவப் பிரசாரத்திற்கு அமெரிக்காவின் ஆதரவை நிறுத்துவதாக ஜனாதிபதி ஜோ பிடன் அறிவித்தார்.

பொருளாதார மற்றும் நாணயச் சரிவு மற்றும் கொவிட்-19 தொற்றுநோயால் நாட்டின் நெருக்கடிகள் மோசமடைந்து வருவதால் ஐ.நா. அதிகாரிகள் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான சமாதான பேச்சு வார்த்தைகளை புதுப்பிக்க முயற்சிக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள்சபை ஏமனை உலகின் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடி மிக்க நாடு என்று விவரிக்கிறது. அங்கு 80 சதவீத மக்களுக்கு உதவி தேவைப்படுகிறது. மில் லியன் கணக்கான மக்கள் பஞ்சத்தை எதிர்கொண்டு வரு வதாகவும், உதவி வழங்க அதிக பணம் தேவைப்படுவ தாகவும் ஐ.நா. உயர் அதிகாரிகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## டில்லியில் பயங்கர தீ விபத்து 20 குடிசைகள் எரிந்து நாசம்

(டில்லி)

டில்லியில் நேற்று அதிகாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் 20 குடிசைகள் எரிந்து நாசமாகின.

தென் கிழக்கு டில்லியில் ஒக்ஹலா சஞ்சய் காலனியில் குடிசை பகுதி உள்ளது. இங்கு ஏராளமானோர் வசித்து வருகிறார்கள். மேலும் அங்கு துணி குடோன்களும் உள்ளன.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 2 மணி அளவில் குடிசை பகுதியில் திடீரென்று தீப்பிடித்தது.

சிறிது நேரத்தில் தீ மளமளவென்று குடிசை வீடுகளுக்கு வேகமாக பரவியது. இதனால் தூங்கிக்கொண்டு இருந்த பொதுமக்கள் அலறியடித்தபடி எழுந்து வீடுகளில் இருந்து வெளியே ஓடி வந்தனர். தீ கொளுந்து விட்டு எரிந்ததால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாக காட்சி அளித்தது.

இந்த பயங்கர தீ விபத்தில் 20 இற்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து நாசமானது. அனைத்து பொருட்களும் தீயில் கருகின. (நி-4)

# பொறுப்பற்ற செயற்பாடுகளால் தொற்று அதிகரிக்கக் கூடும்

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

பொறுப்பற்ற நடத்தை காரணமாக அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் மக்கள் மத்தியில் கொவிட்-19 இறப்பு மற்றும் தொற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

தற்போதைய நிலைமை பாதுகாப்பானது என்றும் அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் மக்கள் நம்புகின்றனர் என அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

கடந்த ஆண்டு டிசம்பருக்கு முன்பு செய்ததைப் போல மக்கள் தங்கள் பயணத்தை கட்டுப்படுத்தவில்லை.

ஆகையால், அடுத்த இரண்டு வாரங்களில் வைரஸ் பரவுவதில் பெரும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என அவர் எச்சரித்துள்ளார். (நி-4)

# தூங்கிக் கொண்டிருந்தவரை தூக்கி வீசிய காட்டு யானை

(கொழும்பு)

கஹடகஸ்திகிலிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முக்கிரியாவ பகுதியில் காட்டு யானையின் தாக்குதலினால் நான்கு பிள்ளைகளின் தந்தையொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு யானையின் தாக்குதலினால் உயிரிழந்தவர் ஹொரவப்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

முக்கிரியாவ பகுதியில் வயல் காவலுக்காக இரண்டு பேர் சென்று உயரமான குடிசையில் தூங்கிக் கொண்டிருந்த போது யானை உறங்கிக்கொண்டிருந்த நபரை இழுத்து வீசியதாகவும் மற்றையவர் தப்பிச் சென்றதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# அரசிற்கு தெளிவான செய்தி வழங்கவே

## பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டம்

## சுமந்திரன் தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போது ஆட்சியில் இருப்பவர்களிடத்தில் காணப்படும் பெரும்பான்மை வாதம் பேரினவாதமாக உருவெடுப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டப் பேரணி தடைகளைக் கடந்து அரசாங்கத்திற்குத் தெளிவான செய்தியை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், எண்ணிக்கையில் சிறுபான்மையான தேசிய இன மக்கள் தாமும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற அடிப்படையில் நியாயமான உரிமைகளை வழங்குமாறு கோரியே போராடுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான பேரணியில் நேற்று பங்கேற்றவாறு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போதைய அரசாங்கம் சிங்கள, பௌத்த பெரும்பான்மை மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டதாகும். அதன் காரணமாக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டவர்களிடத்தில் பெரும்பான்மை வாதம் காணப்பட்டே வந்தது. ஆனால் இந்த நிலைமையானது காலப்போக்கில் பேரினவாதமாக உருவெடுக்கும் நிலையை எட்டியிருக்கின்றது என அவர் தெரிவித்தார். (நி-4)



# தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும்

(யாழ்ப்பாணம்)


தமிழ் -முஸ்லிம் மக்கள் வடக்கு- கிழக்கில் ஒற்றுமையாக வாழ வேண்டும். அதற்காகவே நாம் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளோம் என முன்னாள் மேல் மாகாண ஆளுநர் மொஹமட் அஸாத் சாலி குறிப்பிட்டுள்ளார்.

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான அகிம்சை வழி பேரணியில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2227

### பிரதாபன்

ரோட்ல ரொம்ப ஸ்பீடா பைக் ஓட்டுறவங்களுக்கு தண்டனையா ஒரு மாதம் ரோட் ரோலர் ஓட்ட விடனும்...



பொறுமைனா என்னான்று தெரிஞ்சிக்க...

### சிவானுஜா

படிக்காம போய்ட்டோமே என்கிற காலம் போயி...



இந்த வேலைக்கு எதுக்குடா அவ்வளவு செலவு பண்ணி படிச்சி தொலைச்சம் என்று நினைக்கிற காலத்துல வந்து நிற்கிறோம்...

### கீர்த்தனா

முட்டாள் பழி வாங்க துடிப்பான்... புத்திசாலி மன்னித்துவிடுவான்...



அதி புத்திசாலி அந்த இடத்திலிருந்து விலகி விடுவான்...

### சந்தோஷ்

நீங்கள் எல்லாம் கலர் கலரா எங்கடா இருந்து வந்தீங்க. சாப்பிடமுடியல, தூங்க முடியல, பாத்ரூம்கூட போக முடியல உங்கள தொடவே நேரம் சரியா இருக்கு.



### குமரேஸ்


இந்த ஜாதகத்துக்கு பணம் கொட்டோ கொட்டுன்னு கொட்டும்...



அப்படின்னா...இந்த ஜாதகத்தை வெச்சுக்கொண்டு இரண்டு இலட்சம் பணம் கொடுங்க ஜோசியரே...

### லட்சுமி

காதல் தோல்விக்கெல்லாம் டெய்லி சிக்ரெட் அடிக்காதீங்க...



உலகத்துல "300 கோடி" பொண்ணு இருக்கு. நுரையீரல் "ஒன்று" தான் இருக்கு...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அரசியல் நாடகங்களை அரங்கேற்றி நான் ஜனாதிபதியாகவில்லை- கோட்டா



(கொழும்பு)

அரசியல் நாடகங்களை அரங்கேற்றியோ அல்லது ஊடகங்களில் பிரசாரங்களை முன்னெடுத்தோ நான் ஜனாதிபதியாகவில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தெரணியகலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர், "ஜனாதிபதி நேரடியாக கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய தேவை கிடையாது. இது அரசியல் நாடகமாகும் என்று விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அரசியல் நாடகங்கள் அரங்கேற்றப் படுவது தேர்தல் காலங்களிலாகும். அதற்கு இன்னும் 4 ஆண்டுகள் உள்ளன.

ஏன் ஜனாதிபதி கிராமங்களுக்குச் செல்கின்றார்? அதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள் அல்லவா? என்று சிலர் சமூக வலைத்தளங்களில் பதிவுகளை செய்திருக்கிறார்கள். அதிகாரிகள் ஊடாக மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொள்ளும் முறைமையும் உள்ளது.

ஆனால் நேரடியாக மக்களை சென்று சந்திப்பதே நான் பின்பற்றும் முறைமையாகும்.

கிராமப்புறங்களிலுள்ள அப்பாவி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுப்பதை தவறாக புரிந்து கொள்ளவோ அல்லது திரிபுபடுத்தவோ கூடாது.

மனிதாபிமானத்துடன் மக்களுக்கான வேலைத் திட்டங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும். அரசியல் நாடகங்களை அரங்கேற்றி அல்லது ஊடகங்களில் பிரசாரங்களை முன்னெடுத்து நான் ஜனாதிபதியாக வில்லை. வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக மக்கள் மத்தியில் செல்ல முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# 1087 இலங்கையர்கள் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர்

(கொழும்பு)

கொரோனா அச்சம் காரணமாக வெளிநாடுகளில் தங்கியிருந்த மேலும் 1087 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து 22 விமானங்கள் மூலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து. அவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (நி-4)

# இந்தியாவுடனான நட்புறவு தொடரும்- இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இராஜதந்திர மட்டத்தில் எவ்வித நெருக்கடியும் ஏற்படவில்லை.

அரசாங்கம் இந்தியாவுடன் தொடர்ந்து நட்புறவுடன் செயற்படும்.

மேற்கு முனையம்தொடர்பில் இறுதி தீர்மானம் ஏதும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என பிராந்திய உறவு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை முழுமையாக அபிவிருத்தி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கிய பிறகு இந்தியா இலங்கைக்கு தொடர்ந்து அழுத்தம் பிரயோகித்துள்ளதாக கூறப்படும் செய்தி முற்றிலும் பொய்யானது.

இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சுயாதீனமாக தீர்மானங்களை எடுக்கும்உரிமை அரசாங்கத்துக்கு உண்டு.

கிழக்கு முனைய விவகாரத்தினால் இந்தியாவுடனான இராஜதந்திர உறவில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. அரசாங்கம் இந்தியாவுடன் தொடர்ந்து நட்புறவுடன் செயற்படும்.

மேற்கு முனையம் தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை. பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டுள்ளது என தாரக பாலசூரிய தெரிவித்தார்.(நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பந்திக்கு முந்து

எனக்குத் தெரிந்த ஒருத்தர். பல கல்யாண மண்டபங்களிலே அவரைப் பார்த்திருக்கின்றேன். சாப்பாட்டுப் பந்தியில் முதல் ஆளாக உட்கார்ந்திருப்பார்.

ஏங்க இப்படி? என்று கேட்டால்.. பந்திக்கு முந்து என்று எங்கள் பெரியவர்களே சொல்லி வைத்திருக்கின்றார்களே. அது உனக்குத் தெரியாதா? என்பார். அதற்குப் பின்பு தான் அதைப்பற்றி நானும் யோசித்துப் பார்த்தேன்.

பந்திக்கு முந்து-படைக்குப் பிந்து என்று நிஜமாகவே அந்த அர்த்தத்திலே தான் பெரியவர்கள் சொல்லியிருப்பார்களா? விபரம் தெரிந்தவர்களைக் கேட்டேன். அது அப்படி இல்லையாம். அவர்கள் கொடுக்கின்ற விளக்கம் என்ன தெரியுமா?அந்தக் காலத்திலே ராஜாக்கள் எல்லாம் நான்கு வகையான படை வைத்திருப்பார்களாம்.

யானைப்படை,குதிரைப்படை,தேர்ப்படை, காலாட்படை இந்த நாற்பெரும் படையும் உடைய மன்னன் தான் சிறந்த மன்னன். ஒரு ராஜா சண்டைக்குப் போகின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். இந்த நான்கு வகையான படையும் அணிவகுத்துப் போகும். முதலிலே யானைப்படை போகும். அதற்கு அடுத்தபடியாக குதிரைப்படை போகும். அடுத்தது தேர்ப்படை அதற்கு அடுத்தது காலாட்படை. இந்த வரிசையில் தான் போகும். புறநானூறிலே வருகின்ற பாடல்களிலேயே அது இந்த வரிசைப் பிரகாரம் தான் வரும்.

" கடுஞ்சினத்த கொல் களிறும்
கதழ்பரிய கலி மாவும்
நெடுங்கொடிய நிமிர் தேரும்
நெஞ்சுடைய புகல் மறவரும் "
" படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுதல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் "

என்று இன்னொரு பாட்டிலே வருகின்றது.

எப்படிப் பார்த்தாலும் முதலிலே வருவது யானைப் படை. நாலாவதாக வருகின்றது தரைப்படை அதாவது காலாட்படை. அந்தக் காலத்திலே போர்ப்பயிற்சி பெற்ற எல்லோரையுமே படையிலே வைத்திருப்பதில்லை.

தேவைக்கு அதிகமாக உள்ளவர்களையெல்லாம் பயிற்சி கொடுத்து வீட்டுக்கு அனுப்பி வைத்துவிடுவார்கள். அவர்கள் எல்லோரும் வீட்டுக்குப் போய் அவர்களுக்குரிய தொழிலை செய்து கொண்டிருப்பார்கள்.

பகைவர்கள் படையெடுத்து வருகின்றார்கள். போர் ஆரம்பம் ஆகப் போகின்றது என்று தெரிந்தால் அதற்கு அறிகுறியாக போர்ப்பறை முழங்கும். முரசு சத்தம் கேட்கும். இந்தச் சத்தம் கேட்டதும் வீட்டிலே இருக்கின்ற வீரர்கள் எல்லாம் கையிலே கிடைத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு நாட்டைக் காப்பாற்றுவதற்காக ஓடிவருவார்கள்.

அப்படி ஓடி வருவார்கள். படைக்குப் பிந்துவார்கள். அதாவது ஏற்கனவே அணி வகுத்து நிற்கின்ற யானை, குதிரை, தேர் இந்த வரிசையில் கடைசியாக இருக்கின்ற காலாட்படையிலே போய் நிற்பார்கள்.

அப்படி நிற்கும் போது அந்தக் காலாட்படையில் முதலில் நிற்பதற்கு ஆசைப்படுவார்கள். அதாவது பந்திக்கு முந்துவார்கள்.பந்தி என்றால் வரிசை என்று அர்த்தம். அந்த வரிசைக்கு முந்து என்று தான் அர்த்தம்.

அதனால் பந்திக்கு முந்து என்றால் படை வீரர்கள் வரிசையில் முன்னாடி போய் நில் என்று அர்த்தம்.

படைக்குப் பிந்து யானை , குதிரை, தேர், இந்த படை அணி வகுப்பிலே கடைசியாக இருக்கின்ற காலாட்படையில் போய் நில் என்று அர்த்தம். இதை அனர்த்தம் செய்துவிட்டு இப்பொதெல்லாம் நாம் சாப்பாடு பந்தியில் முண்டியடித்துக் கொண்டு கிடக்கின்றோம். எங்கள் ஆள் ஒருவர் இந்த விடயத்திலே மிகவும் எக்ஸ்பர்ட் நிபுணர். ஒரு கல்யாணப் பந்தியில் எனக்கு பக்கத்திலே அவர் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். தற்செயலாக நான் திரும்பிப் பார்த்தேன். அவர் அழுது கொண்டிருந்தார்.

நான் பதறிப்போய்.. ஏன் சேர் அழுகின்றீர்கள்.. ? என்று கேட்டேன். இது அழுகையில்லை சேர் ஆனந்தக் கண்ணீர் என்றார்.

என்ன விபரம் என்று விசாரித்தேன். அவர் சொன்னார். சேர் நானும் என்னுடைய லைப்பிலே எத்தனையோ கல்யாணத்திற்குப் போயிருக்கின்றேன். சாப்பிட்டிருக்கின்றேன்.

ஆனால் இன்றைக்குத் தான்.. சாம்பாருக்குத் தனியாகவும் ரசத்துக்குத் தனியாகவும் அப்பளம் போடுவதைப் பார்த்தேன். இரண்டு அப்பளம் போடுவதைப் பார்த்தேன். இரண்டு அப்பளத்தை ஒன்றாக பார்த்ததும் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். அவ்வளவு தான் என்று சொல்லிக் கொண்டே மேல் துண்டாலே கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

19

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இலக்க உள்ளூராட்சிச் சபைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 3ஆம் பிரிவின், 2 ஆம் உபபிரிவினூடாக உள்ளூராட்சிச் சபை அமைச்சருக்குக் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு இணங்க யாழ்ப்பாணம் மாநகரசபை மற்றும் வவுனியா நகரசபைகளுக்காக வேட்பு மனு அறிவித்தல் பிரசுரிக்கப்பட வேண்டிய திகதியாக 2009 ஜூன் மாதம் 4 ஆம் திகதியைப் பிரகடனப்படுத்தி 2009ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. அவ் அறிவித்தலுக்கு இணங்க ஜூன் மாதம் 18 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வல்ர அச் சபைகளுக்கு வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டன.

இதற்கிணங்க யாழ்ப்பாணம் மாநகரசபை சார்பாக 04 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் மற்றும் 02 சுயேட்சைக் குழுக்களினாலும் 174 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். வவுனியா நகர சபை சார்பாக 06 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் மற்றும் 03 சுயேட்சைக் குழுக்களினாலும் 135 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு 100,417 வாக்காளர்களும் வவுனியா நகரசபைக்கு 24,626 வாக்காளர்களும் பதிவு செய்திருந்தனர்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக்காக தேர்ந்தெடுக்கப்படவிருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 23 ஆக இருந்ததோடு வவுனியா நகரசபைக்கு தேர்ந்தெடுக்கப்படவிருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்தது. 2009.08.08 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது.

இத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 13 உறுப்பினர்களும் (10602 வாக்குகள், 50.67%), இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் 8 உறுப்பினர்களும் (8008 வாக்குகள், 38.28%), சுயேட்சை குழு-1 சார்பில் 1 உறுப்பினரும் (1175 வாக்குகள், 5.62%), தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஒரு உறுப்பினரும் (1007 வாக்குகள், 4.81%), ஐக்கிய தேசிய கட்சிக்கும் (83 வாக்குகள்), சுயேட்சை குழு-2க்கும் (47 வாக்குகள்) உறுப்பினர்கள் கிடைக்கவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிச் சேர்ந்த யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் துரைராஜா இளங்கோ முறையே மேயராகவும் துணை மேயராகவும் நியமிக்கப்பட்டனர். சபையின் எதிர்க்கட்சித் தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடியப்பு ரெமீடியஸ் நியமிக்கப்பட்டார், ஆனால் அவர் ஜூன் 2011 இல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பக்கம் கட்சி தாவி விட்டார்.

வவுனியா நகர சபையில் தமிழ் அரசுக் கட்சி (தமிழ் தேசிய கூட்டமைப்பு) சார்பில் 5 உறுப்பினர்களும் (4279 வாக்குகள், 34.81%), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் 3 உறுப்பினர்களும் (4136 வாக்குகள், 33.65%),ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 2 உறுப்பினர்களும் (3045 வாக்குகள், 24.77%), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் 1 உறுப்பினரும் (587 வாக்குகள், 4.78%) தெரிவாகினர் மற்றைய கட்சிகளுக்கு ஆசனங்கள் கிடைக்கவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எஸ்.என். ஜி. நாதன் மற்றும் முத்து சிவசாமி முகுந்தரதன் முறையே தலைவராகவும் துணைத் தலைவராகவும் நியமிக்கப்பட்டனர். 2011 இல் எஸ்.என். ஜி.நாதன் தமிழ் தேசிய கூட்டமைப்பைவிட்டு வெளியேறிய பின்னர் அவருக்கு பதிலாக தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஜயாத்துரை கனகையா தலைவராக நியமிக்கப்பட்டார்.

### உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் - 2011

2011 உள்ளூராட்சித் தேர்தல்கள் இலங்கையில் 2011, மார்ச் 17, ஜூலை 23 மற்றும் அக்டோபர் 8 ஆகிய நாட்களில் மூன்று கட்டங்களாக நடைபெற்றன.

இலங்கை முழுவதிலும் மொத்தம் உள்ள 335 உள்ளூராட்சிச் சபைகளில் 322 உள்ளூராட்சிச் சபைகளுக்கு 4,327 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல்கள் நடைபெற்றன. மொத்தம் 13.7 மில்லியன் இலங்கையர்கள் வாக்களிக்கத் தகுதியானவர்களாக அறிவிக்கப்பட்டார்கள்.

மீள்குடியிருப்பு மற்றும் மிதிவெடி அகற்றும் பணிகள் நிறைவடையாததால், முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய இரண்டு சபைகளின் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. 2008, 2009 ஆம் ஆண்டுகளில் தேர்தல்கள் நடந்த 11 உள்ளூராட்சிச்சபைகளின் பதவிக் காலங்கள் இன்னும் முடிவடையாததால் அச் சபைகளுக்கும் 2011இல் தேர்தல்கள் நடைபெறவில்லை.

ஆரம்பத்தில் 301 உள்ளூராட்சிச் சபைகளுக்கு மட்டுமே தேர்தல் நடத்த வேட்புமனு கோரப்பட்டது. அறிவிக்கப்பட்ட 301 சபைகளில் 452 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இதற்கு எதிராக பல கட்சிகள் வழக்குத் தாக்கல் செய்ததையடுத்து யாழ்ப்பாண மாவட்டம் உட்பட 67 உள்ளூராட்சிச்சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டு அவற்றில் 65 சபைகளுக்கு 2011 ஜூலை 23 ஆம் திகதி தேர்தல்கள் நடந்தன. எஞ்சிய 23 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் 2011 ஒக்டோபர் 8 இல் இடம்பெற்றன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 270 சபைகளைக் கைப்பற்றியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 32 சபைகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 9 சபைகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 5 சபைகளையும், சுயேட்சைக் குழு ஒரு சபையையும் கைப்பற்றியது. 5 உள்ளூராட்சிச்சபைகளில் எக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை,. ஆனாலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 3 சபைகளிலும், ஐக்கிய தேசியக் கட்சி ஒரு சபையிலும் (கொழும்பு), மலையக மக்கள் முன்னணி ஒரு சபையிலும் அதிக இடங்களைக் கைப்பற்றியது.

### முதல் கட்டம் - 17 மார்ச் 2011

234உள்ளூராட்சிச்சபைகளுக்கு தேர்தல்கள் நடைபெற்றன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 205 உள்ளூராட்சிச் சபைகளையும் (தேசிய காங்கிரஸ் சார்பில் 2 சபைகள் உட்பட), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 12 சபைகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 9 சபைகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 சபைகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி ஆதரவில் சுயேட்சைக் குழு ஒரு சபையையும் கைப்பற்றின. 3 சபைகளை எக்கட்சியும் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவில்லை. ஆனாலும் இரண்டில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியும், ஒன்றில் மலையக மக்கள் முன்னணியும் பெரும்பான்மையைப் பெற்றன.

### இரண்டாம் கட்டம் - 23 ஜூலை, 2011

65 உள்ளூராட்சிச்சபைகளுக்கு தேர்தல்கள் நடைபெற்றன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 44 உள்ளூராட்சிச் சபைகளையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 20 சபைகளையும் (தமிழர் விடுதலைக் கூட்டணியின் 2 இடங்கள் உட்பட) கைப்பற்றின. ஒரு சபையை எக்கட்சியும் கைப்பறவில்லை, ஆனாலும் அதில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி பெரும்பான்மை இடங்களைப் பெற்றது.

### மூன்றாம் கட்டம் - 8 ஒக்டோபர், 2011

கொழும்பு மாநகரசபை உட்பட எஞ்சியுள்ள 17 மாநகர சபைகள் (அநுராதபுரம், பதுளை, கொழும்பு, தெகிவளை-கல்கிஸை, காலி, கம்பஹா, கல்முனை, கண்டி, குருநாகலை, மாத்தளை, மாத்தறை, மொரட்டுவை, நீர்கொழும்பு, நுவரெலியா, இரத்தினபுரி, சிறீ ஜயவர்த்தனபுர கோட்டே (அம்பாந்தோட்டை), ஒரு நகரசபை (கொலன்னாவை), மற்றும் 5 பிரதேச சபைகளுக்கான (அம்பாந்தோட்டை, கங்கவட்ட கோறளை, கொட்டிகாவத்த - முல்லேரியா, குண்டசாலை, சூரிய வெவெ) வேட்பு மனுக்கள் 2011 ஓகஸ்ட் 18 முதல் 25 வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தேர்தல் திணைக்களம் 2011 ஓகஸ்ட் 4 இல் அறிவித்தது. தேர்தல் 2011 ஒக்டோபர் 8 இல் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று சபைகளுக்கான தேர்தல் திகதிகள் அறிவிக்கப்படவில்லை.


மொத்தம் 23 சபைகளில் 21 ,ல் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிவெற்றி பெற்றது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கல்முனை மாநகரசபையைக் கைப்பற்றியது. கொழும்பு மாநகர சபையில் எக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி ஆகக்கூடிய இடங்களைக் கைப்பற்றியது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி இரண்டு சபைகளில் தேசிய காங்கிரசின் கீழும், 294 சபைகளில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி என்ற பெயரிலும் போட்டியிட்டது.

அகில இலங்கை முஸ்லிம் காங் கிரஸ் 4 சபைகளில் தனித்துப் போட்டியிட்டது, ஏனையவற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி இன் கீழ் போட்டியிட்டது. லங்கா சமசமாஜக் கட்சி 2 சபைகளில் தனித்துவம் ஏனையவற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி இன் கீழும் போட்டியிட்டது.

(தொடரும்...)

# பேரணியை குழப்ப அநாமதேய சுவரொட்டிகள்




(யாழ்ப்பாணம்)

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நீதி கோரும் நெடும்பயணத்தை குழப்பும் வகையில் அடையாளம் தெரியாத அநாமதேய நபர்களால் யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கு சில இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

'கொவிட்-19 தொற்று நோயை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரும் #P2P வேண்டாம்', 'கொவிட்19 ஐக் கொண்டுவரும் **TNA, TNPF, TMTK**' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் யாழ்.நகரம் உள்ளிட்ட சில பகுதிகளில் இருட்டிய நேரத்தில் நேற்று முன்தினம் ஒட்டப்பட்டன.

கிளிநொச்சியிலும் பேரணியைக் குழப்பும் வகையில் இவ்வாறான சில சதி முயற்சிகள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி

## மந்திரங்களின் மகிமை

*(தொடர்ச்சி)*

எனவே மந்திரச் சொற்கள் நிறைந்த பாடல்களைத் தெரிந்து கொண்டு உள்ளம் உருகப்பாடினால் நிம்மதியான வாழ்வு பெறலாம். அதிலும் ஆலயங்களில் பாடல்களைப் பாடும்போது நிச்சயம் இரட்டிப்புப் பலன் கிடைக்கும்.

சில பதிகங்கள், மந்திரங்களைக் குறிப்பிட்ட ஊர்களில் உள்ள ஆலயங்களில் அமர்ந்து ஜெபிப்பது நல்லது என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

ஏனெனில் குறிப்பிட்ட தலத்தில் குறிப் பிட்ட மந்திரத்தை உச்சரிக்கும்போது 100 சதவீதம் பலன் கிடைப்பதை அனுபவ பூர்வமாக உணரலாம்.

சில மந்திரங்களை ஆலயங்களில் சில செயல்கள் செய்யும் போது உச்சரிக்க வேண்டும். உதாரணத்துக்குத் திருநீறு பூசும்போது "ஓம் சிவாய நம" என்று சொல்லிக் கொண்டே பூச வேண்டும்.

அதுபோல ஒரு செயலை தொடங்கும் போது "ஸ்ரீகணேச பஞ்ச ரத்னம்" எனும் மந்திர வலிமையுள்ள சுலோகங்களை உச்சரித்தால் நமது நற்காரியங்கள் அனைத்தும் தடை இல்லாமல் நிறைவேறும்.

"ஸ்ரீ விஸ்வநாதாஷ்டகம்" எனும் 8 சுலோகங்கள் மந்திர வலிமை பெற்றவை. இந்த சுலோகங்களை திங்கள் தோறும் சிவபெருமான் சந்நிதியில் நின்று கூறி வழிபட்டால் வாழ்வில் எதற்கும் எந்த இடையூறும் வராது.

அதிகாலை நேரத்தில் சக்தி தலங்களுக்குச் சென்றால் மறக்காமல் ஆதிசங்கரர் அருளிய "கௌரி சதகம்" பாட வேண்டும். இந்த மந்திரம் நிம்மதியான வாழ்வைத் தேடித்தரும். வசிஷ்ட முனிவர் சிவநாம மந்திரங்கள் நிறைய எழுதியுள்ளார்.

அந்த மந்திரங்களைத் தினமும் மனதுக்குள் 3 தடவை சொன்னால்போதும் தரித்திரங்கள் ஓடி விடும். கந்தபுராணத்தில் வரும் "சங்கர சமஹிதை" மந்திரத்தை சிவாலயத்தில் அமர்ந்து படித்தால் எல்லாவித சுகபோகங்களும் தேடி வரும்.

அதுபோல ஆதிசங்கரர் இயற்றிய "ஸாம்ப பரப்பிரம்ம" சுலோகத்தை தினமும் ஆலய பிரகாரங்களில் அமர்ந்து படித்து வழிபட்டு வந்தால் அஷ்டமாசித்திகளைப் பெறலாம்.

"ப்ருதி வீஸ்வராய ஸ்தோத்திரம்" எனும் மந்திரத்தை சிவாலய கருவறை முன்பு நின்று உச்சரித்தால் குடும்பத்தில் அமைதி உண்டாகும்.

துர்க்காதேவி முன்பு நின்று "ஸ்ரீதுர்கா கவசம்" பாடினால் கணவன் - மனைவி இடையே அன்பு அதிகரிக்கும் பிரிந்த தம்பதிகள் ஒன்று சேருவார்கள்.

ஸ்ரீசுப்பிரமணிய பஞ்சரத்னம் பாடினால் முருகன் அருள் பெறலாம். ஸ்ரீமகாலட்சுமி சந்நிதி முன்பு நின்று அவருக்குரிய அஷ்டக மந்திரத்தைக் கூறினால் நமது பொருளாதார நிலை உயரும்.

குங்கும பஞ்சதசி என்றொரு மந்திரம் உள்ளது. காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் ஆலயத்தில் இதைச் சிறப்பாகச் செய்வார்கள். இந்தப் பஞ்சதசியைப் பாடினால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

இப்படி ஒவ்வொரு சந்நிதியிலும் உச்சரிக்க தனி தனி மந்திரங்கள் உள்ளன. அருளும் பொருளும் பெற அஷ்டலட்சமி ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும். சகல கலைகளிலும் சிறக்க சகலகலா வல்லி மாலை சொல்ல வேண்டும்.

இத்தகைய மந்திரங்களில் காயத்ரி மந்திரம் உயர்வானது. இது வேதங்களின் தாய் என்று போற்றப்படுகிறது.

அதுபோல பிரணவ மந்திரம் (ஓம்) மிக மிக சக்தி வாய்ந்தது. சூரியனில் இருந்து வெளியாகும் ஓசை "ஓம்" என்று ஒலிப்பதாக அண்மையில் நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறைகளை மீறிய மேலும் 11 பேர் கைது

(கொழும்பு)

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் கொவிட் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதிக்குள் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 3,022 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். மேலும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுகின்றவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

## மஞ்சளுடன் கைது

(கொழும்பு)

கற்பிட்டி - பள்ளிவாசல்துறை அம்மாதோட்டம் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 75 இலட்சம் ரூபாய் பெறுமதியான 1500 கிலோ கிராம் நிறையுடைய மஞ்சளுடன் நேற்று அதிகாலையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

50 பைகளில் அடைக்கப்பட்டிருந்த மஞ்சள் கடற்கரைக்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. (நி-4)

## ஊழியர் சேமலாப நிதியம்; வயதெல்லையில் மாற்றம்

(கொழும்பு)

ஊழியர்சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யக் கூடிய குறைந்தபட்ச வயதெல்லையை மாற்றியமைப்பதற்கான உத்தரவு விரைவு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. இந்த வயதெல்லையை 14 முதல் 16 வரை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு தற்போதுவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 350 | 370 | 400 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 125 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 750 | 800 | 900 |
| தக்காளி | 240 | 200 | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 100 | 80 | 100 | 120 |
| கரட் | 200 | 260 | 230 | 280 |
| பூசணி | 140 | 150. | 130 | 200 |
| புடோல் | 220 | 200 | 200 | 200 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 400-500 | 450 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 80-140 | 100 |
| பாகற்காய் | 250 | 220 | 240 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 250 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 250 | 200 | 240 | 300 |
| லீக்ஸ் | 100 | 140 | 180 | 300 |
| பீற்றூட் | 260 | 300 | 240 | 280 |
| கறிமிளகாய் | 350 | 400 | 380 | 400 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 160 | 180 | 170 | 240 |
| கத்தரிதம்புள்ள | 400 | 350 | — | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 80 |
| தேசிக்காய் | 100 | 120 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 90 | 60-80 | 70-100 |
| இராசவள்ளி | 100 | 230 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 240 | 280 | 350 |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 100 | 30 | 30 |
| ஈரப்பலா | 130 | 120 | — | 80 |



# சிறுவர் அரங்கம்

## நாயும் ஓநாயும்



ஒருநாள் மாலை ஒரு நாயும் ஒரு ஓநாயும் சந்தித்தன. பல நாட்களாகப் போதுமான உணவு இல்லாததால் ஓநாய் மிகவும் மெலிந்து சோர்வுடன் இருந்தது.

நாய் ஓநாயைப் பார்த்து “ நண்பரே! ஏன் மிகவும் வருத்தத்துடன் இருக்கின்றீர்கள்? தங்களுக்கு என்ன குறை? என்று கேட்டது.

“ நான் உணவு உண்டு இரண்டு நாட்களுக்கு மேல் ஆகின்றது. பசியால் மிகவும் வாடுகின்றேன்” என்று ஓநாய் பதில் கூறியது.

இதைக்கேட்டு வருத்தமுற்ற நாய் “ நண்பரே! கலங்க வேண்டாம். நான் தங்களுக்கு உதவுகின்றேன். என்னுடன் என்னை வளர்ப்பவர் வீட்டிற்கு வாருங்கள்.

தங்களுக்கு அங்கு நிறைய உணவு கிடைக்கும். தாங்கள் பசியால் வாட வேண்டாம் என்றது.

சிறிது மகிழ்ச்சியுடன் ஓநாய் நாயுடன் கூடப் புறப்பட்டுச் சென்றது. இரண்டும் பேசிக் கொண்டே சென்றன.

சிறிது தூரம் சென்றதும் தற்செயலாய் ஓநாய், நாயின் கழுத்திலுள்ள தோல் பட்டையைப் பார்த்து. உடனே நாயிடம் அப்பட்டை எதற்காக? என்று கேட்டது.

“இது என்னை வளர்ப்பவர் எனக்குப் போட்டுள்ள பட்டை. இதிலுள்ள கொக்கியால் என்னை ஒரு சங்கிலியுடன் பிணைத்து பகலில் கட்டிவைப்பார்.

இரவு நேரத்தில் தான் சங்கிலியை அவிழ்த்துவிடுவார்” என்று நாய் கூறியது. “வாருங்கள் போகலாம்” என்று ஓநாயை அழைத்தது. இது கேட்ட ஓநாய், நாயைப் பார்த்து “அன்புள்ள நண்பரே! தங்களது உதவிக்கு எனது நன்றி. ஆனால் நான் பசியால் வாடினாலும் உணவுக்காக அடிமையாக வாழ விரும்பவில்லை” என்று கூறியது. பிறகு நாயிடம் விடைபெற்று வந்த வழியே திரும்பிச் சென்றது.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## பிரமிக்க வைத்த போரஸ்




கவலையாக இருந்தது அலெக்சாண்டருக்கு. மழை நிற்காவிட்டால் ஆற்றைக் கடக்க முடியாது. வீரர்களுக்கு உணவுப் பிரச்சினை வந்துவிடும்.

சூரியன் தன்னுடைய வீரியத்தைக் குறைத்துக்கொண்டே வந்ததால் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. வானம் இருண்டது. காற்றும் மழையும் பிண்ணிப் பிணைந்தன. இடிச்சத்தம்.

எங்கே நம்முடைய தலையில் வந்து இறங்கிவிட்டதோ என்று அஞ்சும் அளவுக்கு. சத்தமே உயிரைக் குடித்துவிடும் போல இருந்தது.

தாமதம் செய்துகொண்டே இருப்பது அறிவீனம். அலெக்சாண்டரின் படைகள் துணிச்சலாக ஆற்றைக் கடந்தே தீரவேண்டும். வீரர்களை ஒருமுறை பார்த்தார். அவர்கள் கண்களில் எந்தவிதத் தயக்கமும் இல்லை.

திரும்பவும் ஜீலம் நதியை ஒருமுறை நோட்டம் பார்த்தார் அலெக்சாண்டர். தூரத்தில் வளைந்து நெளிந்து நதி சென்று கொண்டிருப்பது அலெக்சாண்டரின் கண்களில் பட்டது. பலே சரியான வழி கிடைத்துவிட்டது.

வாருங்கள் கொஞ்ச நேரம் சென்றால் எளிதாகக் கடக்கலாம். நதி வளைந்து செல்கிறது. அதனால் மோதும் வேகம் அவ்வளவு பலமாக இருக்காது. வாருங்கள்.

படகுகளில் ஏறி அமர்ந்தனர் வீரர்கள். அதற்கு இலேசாக மழை குறைந்திருந்தது. ம். செலுத்துங்கள் படகுகளை.

கரையைப் பத்திரமாகக் கடந்ததும் அலெக்சாண்டரின் படைகள் இரண்டு திசைகளில் பிரிந்துவிடுவது. பிறகு தாக்குதல் நடத்துவது. இதுதான் திட்டம். அலெக்சாண்டர் தெளிவாகக் கூறியிருந்தார்.

யானைகளின் நடுங்கவைக்கும் பிளிறல் சத்தம். கூடவே குதிரைகளின் கனைப்புச் சத்தம். உலைக்களத்தில் பழுதுபட்ட ஆயுதங்களைச் செம்மைப்படுத்திக் கொண்டிருந்தனர் வீரர்கள். இரும்புச் சத்தம்.

உண்மையாகவே அத்தனை பலமாக இருந்தது. இருதரப்பு முகாம்களிலும் போர் நடைபெறுவதற்கான அத்தனை முஸ்தீபுகளும் நடந்து கொண்டிருந்தன. (தொடரும்)

தேவையில்லாதபோது வாயை மூடிக்கொள்ளுங்கள். சரியான சந்தர்ப்பம் வந்தால் சொல்லுங்கள். சொல்வதைத் தீப்பொறி எழச் சொல்லுங்கள்.
–பெஞ்சமின் ஃப்ராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அலையெனத் திரண்ட தமிழர் பேரணி வெல்லுமின்! என்றே வானவர் வாழ்த்தினர்

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையென நடந்த வரலாறு காணாத பேரணி நேற்றைய தினம் நிறைவுக்கு வந்தது.

பேரணி கண்டு நெகிழாதவர்கள் யார் உளர்.

நடந்தும் வாகனங்களில் பயணித்தும் மோட்டார் சைக்கிள்களில் பவனியாகச் சென்றும் தங்கள் உரிமைக்காகக் குரல் கொடுத்த தமிழ் மக்களின் மன உறுதி கண்டு தேவர்களும் வியந்தனர் என்று கூறுமளவுக்கு பேரணி மகோன்னதமாக நடந்தேறியுள்ளது.

அதிலும் எங்கள் இளைஞர்கள், அணி அணியாய் மோட்டார் சைக்கிள்களில் சென்றதைப் பார்த்தபோது,

குருசேத்திரம் நோக்கி பார்த்தசாரதி தேரைச் செலுத்த; தர்மத்தை நிலைநாட்டும் மிடுக்கோடு வில்லேந்தி அருச்சுனன் நிற்க; வெல்லுமின்...! வெல்லுமின்...! என்று வானவர்கள் வாழ்த்துரைத்தனர் என்ற மகாபாரதக் கதையின் வர்ணனையே நம்மனத்திடை வந்தெழுந்தது.

இத்துணை ஒழுங்குகள், ஏற்பாடுகள் என அந்தனையும் தமிழ்ப்பற்றினால் தாமாக நடந்தவை என்பதற்கு ஆய்வேதும் தேவையில்லை.

சமயத் தலைவர்கள், சமூக பொது அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல்வாதிகள் என அனைவரும் ஒன்றுதிரண்டு பேரணியாகப் புறப்பட்டபோது, அதைப் பார்த்திருந்தவர்கள் எல்லோரும் தமிழ் இனப்பற்றின் மிகுதியால்;

நம் இனத்துக்கு நடக்கின்ற ஈனத்தை நாம் சொல்ல மறந்தால் வேறு யார் சொல்வர் என்ற மனச்சாட்சியில்,

ஆண்ட பரம்பரையை அடிமைப்படுத்த விடுவது நீதியோ! என்ற மூச்சினால்,

எம் காணியை அபகரித்து அவர் தம் வரலாறு எழுதவும் இது எங்கள் நாடு என்று சொல்லி எங்களை மீண்டும் மீண்டும் மண்ணில் புதைக்கின்ற அக்கிரமத்தை இனியும் பார்த்திருக்கக் கூடாது என்ற பேரெழுச்சியில் எழுந்த பேரணியை யாரால் தடை செய்ய முடியும்

ஆம், தமிழர் பேரணியின் இத்துணை எழுச்சி எதனால் என்று கேட்டால்,

ஆள்வது நீயென்பதற்காக எங்கள் தேசத்தை – எங்கள் தாயகத்தை நீ உனதாக்க நினைத்தால் விடமுடியுமா என்ன?

செம்மலையில், கன்னியாவில், குருந்தூர் மலையில், காங்கேசன்துறையில், உருத்திரபுரத்தில் நீவிர் செய்யும் ஆக்கிரமிப்பே தமிழ் மக்களை ஆர்ப்பரிக்க வைத்தது என்றுணர்க.

மீண்டும் மீண்டும் தமிழ் இன வஞ்சிப்பை ஆட்சி அதிகாரத்தால் செய்கின்றபோது; அமைதியாய் இருந்த மக்கள் அணியாய் பேரலையாய் பேரண்டம் அதிரும் பேரணியாய் திரள்வர் என்பதே உண்மை.

அதுவே பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நடந்தாயிற்று.

இனியேனும் மனிதம் பற்றி ஆட்சியாளர்கள் சிந்தித்தால் ஆவது நல்லதாக அமையும்.

# கொரோனாவில் இருந்து மீண்டவர்களை உருமாறிய வைரஸ் எளிதாக தாக்கக்கூடும்

## ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)

**கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களையும் குணமடைந்தவர்களையும் உருமாறிய கொரோனா வைரஸ் மீண்டும் தாக்கலாம் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.**

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளுக்கு பரவி பாதிப்பை ஏற்படுத்தியது. வைரஸ் பரவுவது சில நாடுகளில் குறைந்து வந்த நிலையில் இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்காவில் உருமாற்றம் அடைந்த புதிய வகை கொரோனா வைரஸ் வேகமாக பரவியது.

மரபணுவில் மாற்றம் அடைந்த இந்த வைரஸ் முன்பை விட 70 சதவீதம் வேகமாக பரவும் என்று தெரிவிக்கப்பட்டது. இதே போல் உருமாறிய கொரோனாவால் அதிக உயிரிழப்பு மற்றும் பாதிப்புகள் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்தனர்.

உருமாறிய கொரோனாவுக்கு எதிராக தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்துகளும் பலன் அளிக்காமல் போகலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் உருமாறிய கொரோனாவைரஸ் ஏற்கனவே அந்நோயின் பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களை எளிதாக தாக்க வாய்ப்புள்ளது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.(நி-4)

# அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளை ஒழிக்க முஸ்லிம் மக்களுக்கு ஆதரவு வழங்குவேன்

## ஞானசார தேரர் தெரிவிப்பு

(காலி)

அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளை ஒழிப்பதற்கு முஸ்லிம் மக்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு தான் முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் ஞானசார தேரர் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு 2 மில்லியன் ரூபா வென்றுள்ள பாடசாலை மாணவி ஷுக்ராவை பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடிப்படைவாதிகளின் செயற்பாடுகளை ஒழிப்பதற்கு முஸ்லிம் மக்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு தான் முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் ஞானசார தேரர் தெரிவித்தார். (நி-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** பொலிகண்டி ஐஸ் தொழிற்சாலை, நெடியகாடு, பொலிகண்டி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** குடாகச்சக்கொடிய கிராமம், மடுக் கந்தையிலிருந்து துட்டுவாகை வரை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, பாவற்குளம் கிராமம், அவறந்துலாவ சமணன்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** ஆத்திமோட்டை, கூராய், சேதுவிநாயகபுரம், கோவில்குளம், பள்ளமடு, விடத்தல்தீவு, கற்கிடந்தகுளம், வீரபுரம், றங்கீத்கம, நீராவிபுரம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

# கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 807 பேர் குணமடைவு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 807 பேர் பூரணமாக குணமடைந்து நேற்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 63 ஆயிரத்து 401 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரையில் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 68 ஆயிரத்து 576 ஆக பதிவாகியுள்ளது. (நி-4)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## காலவேகம்



விருப்பு, வெறுப்பு உணர்ச்சிகளில் அதிக வன்மையும், வேகமும் உடைய மனிதன், விலங்குகளைப் போல், காட்டிலும், குகையிலும் வாழ்ந்திருந்த காலம் உண்டு.

நெருப்பைக் கண்டுபிடித்து, அதை உபயோகிக்கக் கற்றபின், வேகவைத்து ஆகாரம் உண்ணக் கற்றுக் கொண்டான். செயற்கையில் ஒளி ஏற்படுத்திக் கொண்டான். நேற்று இன்று நாளை எனக் கடந்த, நிகழ், எதிர் காலங்களைச் சுட்டும் முன்னேற்றம் அடைந்தான். பொருட்களைச் சேமித்தல், பாதுகாத்தல் என்பனவற்றையும் கற்றுக் கொண்டான்.

இரும்பையும், மின்சாரத்தையும் கண்டுபிடித்த பின், பல துறைகளிலும் வேகமாக முன்னேறி வாழ்வை வளமாக்கிக் கொண்டான். அறிவு மேலும் உயர்ந்து அணுசக்தியைக் கண்டுபிடித்த பின், வாழ்வில் முன்னேறிக் கொண்டே இருக்கும் பாதையில், ஒரு திருப்பம் வந்திருக்கிறது.


அதாவது அவன் அடைந்த முன்னேற்றங்கள் யாவும் பயனற்றே போகும் அளவுக்கு அணுசக்தியைத் தவறாக மனித இன வாழ்விற்குப் பாதகமாக உபயோகிக்க ஆரம்பித்து விட்டதால், மனித இனமே அழிந்து விடக்கூடிய அபாயம் தோன்றிவிட்டது. இத்தகைய விபரீத விளைவுகளைத் தடுத்து மனித இனத்தைக் காப்பாற்ற எல்லோரும் பெரு முயற்சி கொள்ள வேண்டும்.

# எதிர்க்க வந்தவரை தகர்த்தெறிந்துவிட்டு


## விண்ணதிர வெற்றி முரசறைந்தது தமிழரின் அகிம்சை போராட்டம்




கிளிநொச்சி




பளை

சாவகச்சேரி



யாழ். பல்கலைக்கழகம்




நல்லூர்

## ரயிலுடன் மோது...

அரியாலை நாவலடியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த அவர் ரயில் பாதுகாப்பற்ற கடவையை கடக்க முற்பட்டபோது, தொடருந்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாகினார் என்று தெரிவிக்கப்பட்டது.

உடுவிலைச் சேர்ந்த விஸ்வநாதன் பாலரூபன் (வயது-42) என்ற ஆசிரியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா-30,33)

## முள்ளிவாய்க்...

யாழ். பல்கலைக்கழகத்தில் இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவிடமீள் கட்டுமானத்தில் சேர்ப்பதற்காக இந்த மண் எடுத்து வரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா-18,33)

## தமிழரின் கோரிக்...

வது,

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளான,

- மரபுவழித் தாயகம்
- சுயநிர்ணய உரிமை
- தமிழ்த் தேசியம்

என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும்.

அத்துடன், தமிழ் இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட - தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற இனவழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டும்.

இதன்பால் தொடர்ச்சியாக ஜனநாயக வழியில் போராடுவோம் என உறுதி எடுத்துக் கொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)
















## திலீபனின்...

நினைவுத் தூபியில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து தமிழர் வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி மண்ணை நோக்கி பேரணி முன்னேறிச் சென்று பொலிகண்டியில் நிறைவடைந்தது. (ஞா-18,33)

## 5 பேர்...

பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 356 ஆக அதிகரித்துள்ளது.

இதற்கமைய, கொழும்பு - 15 பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய பெண் ஒருவரும் வக்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவரும் வெலிமட பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவரும் பமுனுகம பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரும் மற்றும் தும்மலசூரிய பிர தேசத்தைச் சேர்ந்த 84 வயதுடைய பெண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ஞா)

## அலையென திரண்...

வடக்கு - கிழக்கு சிவில் சமூக அமைப்புகளின் குறுகியகால ஏற்பாட்டில் இந்த பேரணி ஒழுங்கமைக்கப்பட்டது. அதற்கு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ், முஸ்லிம் பொது அமைப்புக்கள் ஒத்துழைப்பு வழங்கின.

தமிழர் தாயகம் முழுவதும் பேரணியை நடத்த ஏற்பாடாகியபோது பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவுகளைப் பெற்று தடுக்க முயன்றனர்.

எனினும் திட்டமிட்டபடி கடந்த 3ஆம் திகதி புதன்கிழமை அம்பாறை பொத்துவிலில் கொட்டும் மழையில் பேரணி ஆரம்பமாகி, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி ஊடாக நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

பேரணிக்கு அனைவரும் தமது ஒத்துழைப்பை வழங்கினர். பேரணி எந்தவொரு குழப்ப நிலைகளும் ஏற்படாது முன்னேறியது. இந்து, கிறிஸ்தவ மதகுருமார்கள் முன்னின்று பேரணியை நடத்தினர்.

பொலிஸாரின் தடைகளும் சில விசமிகளின் கல்லெறி, ஆணிகளைத் தூவி வீதிகளில் தடை ஏற்படுத்தப்பட்டபோதும் மக்கள் எழுச்சியால் அவை பயனற்றுப் போய்விட்டன.

பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது வாழ்வுரிமையையும் போரின் பின்னரும் தொடரும் அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தனர்.

அதனால் தனது இலக்கை பேரணி அடைந்தது. குறுகிய நாள் அழைப்பில் மக்கள் தமது பேராதரவை வழங்கி ஆட்சியாளர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தமது வாழ்வுரிமையை ஒரே குரலில் வலியுறுத்தியுள்ளனர்.

பொலிகண்டி ஆலடியில் 1985ஆம் ஆண்டு 35 இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட நூலகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டதையடுத்து ஆலடிப் பகுதியில் பேரணி நிறைவடைந்தது.

அங்கு, பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. இதையடுத்து எழுச்சிப் பிரகடனமும் வாசிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான மோட்டார் சைக்கிள், வாகனங்களில் பல்லாயிரம் மக்கள் திரண்டு இந்த பேரணியில் பங்கேற்றிருந்தனர். (ஞா-18,33,60,101)

# கடைக்குச் சென்றவர் திரும்பி வரவில்லை

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(வவுனியா)

செட்டிகுளம் சண்முகபுரம் பகுதியில் வசித்து வரும் 2 பிள்ளைகளின் தந்தையான இராமையா நல்லநாதனை காணவில்லை என அவரின் மனைவி செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டினை மேற்கொண்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை கடைக்குச் செல்வதாக தெரிவித்துவிட்டு வீட்டில் இருந்து சென்றுள்ளார். 2 நாட்கள் கடந்தும் வீடு திரும்பவில்லை.

இதனையடுத்து அவரின் மனைவி செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (ஞா-299)

# மைத்திரி, ரணில் மீது குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் பரிந்துரை

(கொழும்பு)

2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்களை விசாரித்த ஜனாதிபதி ஆணையம் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட நல்லாட்சி அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் குற்றவியல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ளவுள்ளதாக ஆங்கில செய்தித்தாளான சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது. (ஞா)

## 14 பேருக்கு...

பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 14 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் மன்னார் முசலியில் 11 பேருக்கும் கிளிநொச்சி கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் இருவருக்கும் வவுனியா செட்டிகுளம் வைத்தியாலையில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்குமாக 14 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது" என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் கூறினார். (ஞா-18)

## மாற்றுத் திறனா...

பேரணி வந்து கொண்டிருந்தபோது பரந்தன் சந்திப் பகுதியில் ஒன்றுகூடிய மாற்றுத்திறனாளிகள் இப்போராட்டத்துக்கு ஆதரவாக குரல் கொடுத்தனர். (ஞா)


## மந்தி...

செய்து பொலிஸார் தடை ஏற்படுத்திய போதும் மக்கள் எழுச்சி அதனை உடைத்து முன்னேறியது.

பருத்தித்துறை நோக்கிப் பேரணி பயணித்தபோது மந்திகை மடத்தடியில் வீதியின் குறுக்கே நின்று பொலிஸார் நீதிமன்றத் தடை உத்தரவை வைத்து தடுக்க முயன்றனர்.


அத்துடன், பேரணியில் வந்தோரைப் பதிவு செய்தே அனுமதிக்க முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் பெருந்திரளான மக்கள் எதிர்ப்பை வெளியிட்டதால் பொலிஸார் அகன்றமை குறிப்பிடத்தக்கது. (ஞா-60)















## வீடு விற்பனைக்கு

யாழ். பிரம்படி லேன் 2 ஆம் ஒழுங்கையில் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு. (5572)

☎-076 702 3565


# குற்ற விகிதங்களைக் குறைக்க இளைஞர்களுக்கு ஒழுக்கப் பயிற்சி

## அமைச்சர் சரத் வீரசேகர அறிவிப்பு

(கொழும்பு)

குற்ற விகிதங்களைக் குறைக்க இளைஞர்களுக்கு ஒழுக்கத்தில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான ஒரு முன்மொழிவு எதிர்காலத்தில் பாராளுமன்றத்தின்முன் தாக்கல் செய்யப்படும் என்று அமைச்சர் கூறினார்.

நேற்று பொதுப் பாதுகாப்புக் குழுக்களை நிறுவுவதற்கான முன்னோடித் திட்டத்தில் பேசிய அமைச்சர், அனைத்து இளைஞர்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சியை வழங்குவதற்கான தனது முன்மொழிவுக்காக பல அதிகாரிகளால் விமர்சிக்கப்பட்டதாகக் கூறினார்.

மேலும் தற்காப்பு திறன்களின் அவசியத்தையும் நாட்டின் இளைஞர்களுக்கான பயிற்சியையும் அவர் விளக்கினார். (ஞா)

## எதிர்வரும் 22 ஆம் திகதி

# பாகிஸ்தான் பிரதமர் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பெப்ரவரி 22 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இலங்கைவரும் பாகிஸ்தான் பிரதமர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோருடன் சந்திப்பினை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் மூலம், கடந்த ஆண்டு முதல் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு விஜயம் செய்த முதல் அரசாங்கத் தலைவராக அவர் இருப்பார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் கொழும்புக்கான மூன்று நாட்கள் விஜயத்தின் ஒரு மாதத்திற்குப் பிறகு இம்ரான் கானின் திட்டமிட்ட விஜயம் அமையவுள்ளது. (ஞா)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (5568)



100 % உத்தரவாதம் அளிக்கப்பட்ட தொழில் வாய்ப்புடன்கூடிய சுற்றுலா விருந்தோம்பல் கற்கைநெறி

படிக்கும்போதே கைநிறைய சம்பாதிக்க...

80% செய்முறை வகுப்புகள் | அனுபவம் மிகு விரிவுரையாளர்கள் | இலவச ஆங்கில வகுப்பு | அரச மற்றும் சர்வதேச அங்கீகாரச் சான்றிதழ்



Certificate in Hotel and Resort Management

Certificate in International Cookery and Culinary Arts

Approved Center ☎ 076 057 9999 (C-1384)

கனேடிய சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் கற்கை நிலையம்.

CTHI ☎021 314 6171 www.cthi.lk

இல. 1544, கே.கே.எஸ் வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்.



# PEARSON INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.

# Weekday classess
# Weekend Classess
# Personal Classes
# Group Classes
# Lecturers are above band 8 years and professionally qualified

98% Students in IELTS Scored above 6.5
Learn the techiniques to score above 6.0
Unbeatable Success rate in Northern Province

Registered Exam Centre for IELTS
Special discounts for upcoming registration
074 188 7878 infopearsonicollege@gmail.com
idp IELTS (5417)
No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, Jaffna



## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு!

யாழ்ப்பாணத்தில் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள 01.01.2021 இல் இருந்து இயங்கிவரும் கடையில் 07.02.2021 இன்று முதல் அழகுசாதனப் பொருட்கள், சில்வர் பொருட்கள், மாபிள் பொருட்கள், கிளாஸ் வகைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், கயிறு வகைகள், தையல் உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் இவை அனைத்தும் பெற்றுக்கொள்ளலாம். (5531)

## சரவணபவன் பான்சி கவுஸ்

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.

உரிமையாளர் : தே. கலைத்தாசன் (கரன்)

077 468 3354



மீண்டும்

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-1365)

## அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

## அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536



## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603
021 567 1532



## விற்பனைக்கு

கட்டடம் கட்டுவதற்கு தேவையான கொங்கிறீற் கற்கள் மற்றும் தூண்கள் விற்பனைக்குண்டு. (5571)

076 345 8905 (பளை)



## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1379)

077 436 6704, 077 179 1963



## கணக்காளர் தேவை

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது கணக்காளர் நிறுவனத்திற்கு.

- அனுபவமுடைய கணக்காளர்
- கணக்கியல் பயிலுநர் தேவை.

A/L வர்த்தகப் பிரிவில் சித்திபெற்றவர்கள் Chartered CIMA, HNDA மாணவர்கள் விண்ணப்பிக்கலாம். (5573)

075 099 9243



# கண்ணீர் அஞ்சலி



அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாக்குழுவின் 88 ஆவது நிர்வாக குழுப் பொருளாளர், 89 ஆவது குழுச் செயலாளர், 90 ஆவது குழுப் பொருளாளர், சிறந்த சமூக சேவகர் அரியாலையூர்

## விசுவநாதன் பாலரூபன்

அவர்களின் இறப்பு செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-1382)

ஊர் மக்கள் சார்பாக
102 ஆவது நிர்வாகக் குழு,
அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா.



## தவறிவிட்டது

06.02.2021 (சனிக்கிழமை) அன்று மாலை 5.15 - 6.15 மணியளவில் சிவன் அம்மன் கோவில் வீதி நொதேர்ண் வைத்தியசாலைக்கு முன்பாக 3 பவுண் மதிக்கத்தக்க சங்கிலி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். (C-1379)

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 959 9364



## வாடகைக்கு

யாழ். திருநெல்வேலியில் பரமேஸ்வராச் சந்தியில், பலாலி வீதியில் உள்ள எமது கட்டடத்தில் தளபாடமிடப்பட்ட (T.V, அலுமாரி போன்றவை ) இணைந்த குளியலறையுடனான அறைகள் மற்றும் கோல், சமையல் அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (5573)

077 953 0496



## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1336)

0768226240 DHL



அண்ணா EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 075 3305500 (C-1357)

| | | | |
|---|---|---|---|
| 976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.